(When I came to this part of the letter I recollected that the previous evening some of my friends were talking about forming a cabinet wherein Sri. S.R.G. Lan was elected Governor. So I also wanted to offer my humble services and I applied for a post. This letter was the reply to my application).

"Only recently I heard from Mrs. Beauty, of your razor sharp intellect, your unfailing integrity, your intense desire to serve our people, your indescribable ability and last but not least, your indefinable personality. I am greatly pleased with your capacity and character and so I will surely make you the minister of Home affairs in my cabinet. I am thinking of making your brother whom I have known well personally for the past twenty years, the ambassador to 'Taly'.

Your promise forgetting,
Leg pulling, ever duping
Friend,
S. R. G. P. Lan.

When I came to the end of the letter my eyes caught the address given at the head of it. I read the following.

"His Excellency Dr. Sir, S.R.G.P. Lan, M.A., B.A. Hons. (Oxon); M.Sc. (London), Bar-at-Law, K.C.S.I., K.C.I.E., Dr. of Broken pledges, Dubeel Dubeel University, Mannadi).

I burst out laughing loudly. Just then my brother gave me a good shake and woke me up and asked me the reason for my laughter in my sleep. I got angry with him for having disturbed my sweet dreams. Again I closed my eyes and tried to go to dreamland to become the minister for home affairs. But it was all in vain.

Then I got up abusing my brother saying that he had not got the good fortune of becoming the ambassador to Taly.

Miss. S. THANGAM.

CAN YOU FIND OUT THE NAME OF THE CAR?

1. The first three letters of a continent and a metal go to make the name of this Car.
2. This car rhymes with the Duke.
3. This car guards what is in front.
4. This car has a point in it.
5. This car has a mouth.
6. This car has a beaker in it.
7. This car is a man that lives on the hill.
8. This car is where you cross a river.
9. You can't dance in this car though it is a hall.

(1. Austin 2. Buick 3. Vanguard 4. Pontiac 5. Plymouth. 6. Studebaker 7. Hillman 8. Ford 9. Vauxhall.)

Star, India, Tram, Anna—

The first letters of these words form the name of a great woman; the last letters the name of her husband. (Sita-Rama)

S. THANGAM.

॥ श्री नेहरूजीका स्वागत ॥

आ ओ भैया आ ओ लाल ॥
आ ओ आ ओ प्यारे लाल ॥

माँ बापके दुलारे लाल
गांधीके तुम वारिस लाल
भारतके यह जवाहर लाल
दुनिया भरके उत्तम लाल
हो अनमोल हमारे लाल
नेहरू आज भारत भाल ॥

कश्मीरके कंचन लाल
हो हिन्दके प्यारे लाल
विदेशमें कितने ही साल
रहे जुटाने विद्या माल
हो अनमोल हमारे लाल
नेहरू आज भारत भाल ॥

बारिस्टर बन लौटे देश
दुखी जन और धनी नरेश
देखा तुमने बदला वेश
कह जय गांधी! जय कांग्रेस
हो अनमोल हमारे लाल
नेहरू आज भारत भाल ॥

कितना तुमने त्याग किया
सत्याग्रह में भाग लिया
सालों कारा वास किया
और देश आज़ाद किया
हो अनमोल हमारे लाल
नेहरू आज भारत भाल ॥

तुमपर फूल चढाती हैं
हार यही पहनाती हैं
कुंकुम चंदन लगाती हैं
आरती कर हम गाती हैं
हो अनमोल हमारे लाल
नेहरू आज भारत भाल ॥ (आ ओ)

आ ओ शान बढाओ लाल
रक्खो लाज हमारी लाल
हो अनमोल हमारे लाल
नेहरू आज भारत भाल ॥ (आ ओ)

அமரகவி பாரதியார்

மக்கட்குழுவின் விழுமிய நாகரிக வாழ்க்கைக்குத் துணைசெய்பவர் நல்லிசைப் புலவரே. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பிருந்த தமிழ்ப்புலவர்கள் யாவரும் தமிழினத்தாரது நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவும், முயற்சியும் உடையவராய் வாழ்ந்தமையால் தமிழ்நாடு கலைத்துறையிலும் நாகரிகப் பண்பாடுகளிலும் தலைசிறந்து விளங்கியது. சென்ற ஆண்டுகளின் பழுதிலாத் திறனையும், எதிர்காலத்தின் சிறப்பினையும், தம் நிகழ்கால வாழ்க்கையுடன் இயைத்து நோக்கித் தம்மைச் சார்ந்த மக்களைக் கல்வித்துறையிலும், தொழில் துறையிலும் உயர்த்தவல்ல பேரறிவு வாய்ந்தவரே புலவர் என்று போற்றப்பெறுவர். அறிவும், முயற்சியும் உடையார் தம்மில் ஒருங்குகூடி, தத்தம் அறிவின் திறத்தினையும், செயல் திறத்தினையும் தம்முள் ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொண்டு எல்லா மக்களையும் அறிவிலும், முயற்சியிலும் முன்னேற்றுதற்குரிய அறிவுரைகளை வழங்கி நல்வழிப்படுத்துதலே புலவர்களின் தொழிலாகும்.

புலவர்களுக்குக் கருவியாய் அமைவது மொழி. நிலத்தின் வளத்தினை அதன்கண் விளையும் நெல்மணிகள் காட்டுவதுபோல மக்களது அறிவினைப் புலப்படுத்துவது அவர்களால் பேசப்படும் தாய்மொழியாகும். எனவே புலமைக்கு அடையாளமாய் விளங்கும் அம்மொழியினைக் கெடாது போற்றுதல் புலவர்களின் கடமையாகும். அத்தகைய புலவர்களின் கூட்டத்தில் நம் பாரதியாரும் ஒருவரே யாவர் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய சிறப்பு வாய்ந்த பாரதியாரைத் தமிழகமேயன்றிப் பிறிதுலகமும் சிறிதறியும். பாரதியார் மதித்தற்குரியவும், அரியவுமாம் குணம் பல உடையவர். இவரை விரும்புவார் பலர்; வெறுப்பார் சிலர்; இவரிடத்து இவ்விருதிறத்தாரும் வியக்கும் குணம் பல.

பாரதியார் 1882-ம் வருடம் கார்த்திகை மாதம் மூல நட்சத்திரத்தன்று சின்னசாமி அய்யரின் தவப்புதல்வராகப் பிறந்தார். அது கண்டு பெற்றோரும், ஊராரும், ஆனந்தக்கடலில் மூழ்கி உளங்களித்தார்கள். குழந்தை நாளொரு மேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து ஐந்து வயது அடையுமுன்பு தாயார் லக்ஷ்மி விண்ணுலகு எய்தினர். அவரை வளர்ப்பதன் பொருட்டுப் பாரதியாரின் தந்தையார் உறவிலேயே மறுவிவாகம் செய்து கொண்டார். பாரதியார் சிற்றன்னையிடம் அன்பு காட்டித் தமக்கு வேண்டியவைகளைத் தாயின் மூலமாக அடைந்தார்.

ஐந்து வயதிலேயே தாயை இழந்த பாரதியாரின் தேகாரோக்கியத்தில்கூடக் கவலை காட்டாமல் அவருடைய தந்தை சதாகாலமும் கல்வி கற்பிப்பதிலும், கணிதம், பயிற்றுவிப்பதிலுமே கண்ணுங் கருத்துமாக இருந்தார். அதைப் பாரதியார்,

“ஆண்டோர் பத்தினிலாடியும் ஓடியும்
ஆறுகுட்டையி னீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன் மரத்தேறி யிறங்கியும்
என்னோ டொத்த சிறியர் இருப்பால்,
வேண்டுதந்தை விதிப்பினுக்கஞ்சி யான்
வீதி யாட்டங்களேதிலும் கூடிடேன்
தூண்டு நூற் கணத்தோடு தனியனாய்த்
தோழமை பிறிதின்றி வருந்தினேன்”

என்று கூறியிருக்கின்றார்.

பாரதியார் குழந்தைப் பிராயத்தில் தந்தையார் வாங்கிக் கொடுத்த கற்பலகை, குச்சி புஸ்தகங்கள் முதலியவற்றை யார்வீட்டுத் திண்ணையிலாவது வைத்துவிட்டு, குளத்தங்கரைக்குச் சென்று, இயற்கைக் காட்சிகளில் ஈடுபட்டு, ஆனந்தமாக ரசித்துவிட்டு வீடு திரும்புவார். அவரது உள்ளத்தைக் கவிதாதேவிக்கு அர்ப்பணம் செய்து விட்டமையால் பசி, தாகம் கூட அவருக்குத் தெரியாது. சுயசரிதையில் அவர் பன்னிரண்டு வயதில் பிரேமைவைத்ததாகக் கூறியிருக்கும் நங்கை கலைவாணிதான். சாதாரணமாகக் கடவுளைத் தாய்-தந்தை என்ற முறையில்தான் வழிபடுவார்கள். ஆனால் பாரதியாரோ நாயக-நாயகி பாவத்தில்தான் அதிகமாகப் பாடியிருக்கிறார். பரம்பொருளுடன் இரண்டறக் கலந்து ஐக்கியமாவதுதான் பரமானந்தம்; ஒதுங்கி நின்று வணங்குவது இவருக்குப் பிடிக்காது. கடவுளைக் கட்டிப்பிடித்துத் தம் இதயத்தில் சிறைப்படுத்திக் கொண்டுவிட்டார். அதனால்தான் பால்யத்திலேயே பாரதிப்பட்டம் அவருக்கு எதிர்பாராமலேயே கிடைத்தது.

பாரதியாருக்குப் பதினைந்காம் வயதில் திருமணம் நடந்தேறியது. அவருக்குத் திருமணம் ஆன மறுவருடமே அவருடைய தந்தையார்

PANDITJI'S ARRIVAL

THE WELCOME



31 MAY 1956

THE WELCOME ADDRESS FROM OUR CHILDREN

WITH THE CHILDREN

AT T..E FLAG STAFF



THE FLOWER IN FOLIAGE

LAYING THE FOUNDATION STONE OF THE "KAMALA NEHRU HOSTEL"
A skilled man, is he not!

SWEETS PREPARED BY OUR CHILDREN



ON THE WAY TO "KALA MANDAP" — Sweets Everywhere

31 MAY 195

AT THE 'KALA MANDAP' — "Be true daughters of Mother India"

OUR FIRST SOLDIER

CONNEMARA PUBLIC
31 MAY 195
MADRAS

OUR FINANCE MINISTER, SRI C. D. DESHMUKH

THE GYPSY

By Saroja Sastry
V Form B.

"தயிரோ ! தயிர்"

By R. Amirthavalli
V Form B.

PUBLIC LIBRARY
31 MAY 1955

By D. Kausalya Devi,
VI Form A.

Ready ! one two.........three !

நோயுற்று இறந்தார். பாரதியாரின் மனம் நிரம்பவும் வருந்தியது. தந்தையின் வறுமை பாரதியாரைத் துன்புறுத்தியது. குடும்பப் பொறுப்பு பாரதியாருக்கு வந்து சேர்ந்தது, தம் அத்தையார் அழைக்க 1901-ம் ஆண்டு அவர் காசிக்குச் சென்றார். அங்குள்ள சர்வகலாசாலையில் தமிழ்ப்பாடம் இல்லாமையால், வடமொழியைப் புதிதாக எடுத்துப் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்றார். சிலகாரணங்களால் அங்கே மேற்கொண்டு படிக்க முடியாமல் திரும்பவும் எட்டயபுரத்துக்கே வந்து சேர்ந்தார். அச்சமயம் அவருக்கு எட்டயபுரம் சமஸ்தானாதிபதியின் ஆதரவு கிடைத்தது, அவருடைய ஆதரவால் பாரதியார் பாடிய பாடல்கள் அளவில்லை.

கல்வியறிவு, கலையறிவு, தொழிலறிவு முதலிய எல்லாத்துறைகளிலும் பெண்கள் முன்னேறி ஆண்களுக்கு நிகராக விளங்க வேண்டும் என்பது ஒருசாரார் கொள்கை. இத்தகையோர் முற்போக்கு மனத்தினராவர்; பெண்களை அடிமைப்படுத்தி அடக்கிவைத்திருப்பதை அறவே வெறுத்துக் கண்டிப்பவராவர். இவர்களில் கவிஞர் பாரதியாரும் ஒருவர்.

புத்தறிவு கிளர்ந்து ஒளிரும் புது உலகில் எத்தனையோ புதுமைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றால் மக்கள் எவ்வளவோ முன்னேறியுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் ஆண்களும், பெண்களும் வேறுபாடின்றி புத்தறிவின் பயனால் முன்னேறியுள்ளனர். பெண்கள் அறிவுத்துறை, கலைத்துறை முதலிய எல்லாத்துறைகளிலும் ஈடுபட்டுப் புகழ் சிறந்து விளங்குகிறார்கள்.

ஆனால் நம்நாட்டிலோ பெண்கள் போதிய கல்வியறிவின்றி இருக்கிறார்கள். அறியாமை, அச்சம், மூடப்பழக்க வழக்கங்கள், கட்டுப்பாடுகள் ஆகியவைகளுக்கு இரையாகி ஒடுங்கி வாழ்கிறார்கள். இந்நிலைமையைக் கண்ட பாரதியாரின் மனம் கொதித்தது. அவர் மனதில் நம் நாட்டுப்பெண்கள் விடுதலை பெற்று முன்னேற வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது; பல வகையான கருத்துக்கள் சுரந்தன. அக்கருத்துக்களெல்லாம் கவிதைகளாய் மலர்ந்தன. அவற்றுள் 'புதுமைப்பெண்' என்பதும் ஒன்று.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்
அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில்
அவலம் எய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து கள்ளுதல் பெண்ணறமாகுமாம்
உதயகன்னி யுரைப்பது கேட்டிரோ!"

கல்வியறிவினாலேயே மனிதர்கள் மனிதத்தன்மையோடு வாழும் வகை அறிந்து இன்பமாக வாழமுடியும். இது ஆண், பெண் இருபாலாருக்கும் பொது. பெண்கள் கல்வியறிவின்றி, அறியாமை இருளில் தடுமாறி துன்பப்படுகுழியில் வீழ்ந்து இன்பக்கரை இன்னதென்று அறியாமல் வாழ்வதை வெறுத்துத் தள்ள வேண்டும். அவரவர் அறிவிற்கும், ஆற்றலுக்கும் ஏற்றகலையில் தேர்ந்து, தமக்கும் பிறர்க்கும் இன்பமளித்துப் பயனுடன் வாழ்வதை விருப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இப்பகுதியின் மூலம் பாரதியார் நன்கு விளக்கி இருக்கின்றார்.

தமிழ் மொழிக்குப் புதிய சுவையும், தமிழுலகிற்குப் புத்துணர்ச்சியும், தமிழ் மக்கட்குப் புத்துயிரும் தந்து கேட்போர் மனதில் வீரமும், தீரமும் பொங்கி எழச்செய்யும் தமது இன்னிசைத் தீம்பாக்களைத் தமிழகம் முழுதும் முழங்கச் செய்தவர் பாரதியாரேயாவர்.

"இறைவனது திருவருள் பெற்றவர்களை இளமையிலேயே அவர் அழைத்துக் கொள்கிறார்" என்னும் மொழி இவர் விஷயத்தில் பொய்த்துப்போகவில்லை. 1921-ம் வருடம் செப்டம்பர் மாதம் 11-ம் தேதி பாரதியார் இத்துன்ப உலகைநீத்து இன்பம்நிறைந்த விண்ணுலகம் எய்தினார். பாரதமாதா தனது உண்மைப் புதல்வனை இழந்து பரிதவித்தாள்.

இவ்வுலகில் வாழ்ந்தபோது பாரதியார் எத்தனையோ துன்பங்களுக்கு உள்ளானார். ஆயினும் தம் தாய் நாட்டினிடம் அவர் கொண்டிருந்த அளவிலாத அன்புமட்டும் குறையவில்லை. தமிழையும் தமிழ் மக்களையும் அவர் ஒருகணமும் மறக்கவில்லை. அல்லும் பகலும் அனவரதமும் அவரது உள்ளத்தில் குடிகொண்டிருந்த மனோரதம் இதுதான்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு"

வந்தே மாதரம்!

K. R. சாருமதி
VI Form B,

மறந்துபோன சாம்ராஜ்யம்

நீர்வளமும் நிலவளமும் பொருந்திய துங்க பத்திரா நதிக்கரையில் ஒரு ராஜ்யம் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் இருந்தது. அந்த ராஜ்யத்தைப் பற்றிச் சிலர்தான் அறிவார்கள் இந்தக் கட்டுரையில் அதைப்பற்றிக் கூறுவோம்.

துங்கபத்திரா நதி இயற்கை வனப்புடைய ஒரு முக்கிய நதி. இது மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிக் கிருஷ்ணா நதியுடன் கலக்கிறது. இந்த நதி கிருஷ்ணா ஜில்லாவையும், ஹைதராபாத் சமஸ்தானத்தின் ஒரு பகுதியையும் வளப்படுத்துகிறது. இந்த நதியின் கரையில்தான் நாம் அறியப்போகும் ராஜ்யம் இருந்தது.

1336-ல் முகம்மதிய ராஜ்யமான பாமினி ராஜ்யத்திற்குத் தெற்கே இந்து அரசர்களால் ஏற்படுத்தப்பட்ட ராஜ்யம் விஜய நகரம். இந்த ராஜ்யம் முகம்மதிய ராஜ்யத்தைத் தெற்கே பரவவொட்டாமல் தடுக்க ஸ்திரமான ராஜ்யமாகச் சுமார் 250 ஆண்டுகள் மிகவும் உன்னத நிலையில் இருந்தது. ஸ்வெல் (Sewell) என்ற சரித்திரப் பேராசிரியர், இந்த ராஜ்யமானது தெற்கே உள்ள இந்துக்கள் தங்கள் சுதந்திரத்தையும், மதத்தையும் காப்பாற்றிக் கொள்ள ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யமென்று கூறுகின்றார்.

1293-ல் அலாவுத்தின் கில்ஜி விந்திய மலையைத் தாண்டி ஒரு பெரும் சைன்யத்துடன் படையெடுத்துத் தேவகிரியைப் பிடித்துக் கொண்டார். 1309-ல் க்யாதி பெற்ற மாலிகாபூர் என்ற முகம்மதிய வீரன் பெருஞ்சேனையுடன் வாரங்கல் நாட்டைக் கைப்பற்றினன். 1310-ல் தெற்கே வந்து துவார சமுத்திரத்தைக் கைப்பற்றினன். 1318-ல் சுல்தான் குத்புதீன் முபாரக் (Sultan Kutb-ud-Din Mubarak) என்ற முகம்மதிய வீரன் தேவகிரி நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டைப் பாழாக்கினன். 1325-ல் முகமத் துக்ளக்கின் தக்காணப் படையெடுப்பு, தெற்கேயுள்ள ராஜ்யங்களை மிகவும் கவலைக்கிடமாகச் செய்தது. இந்த முகம்மதிய படையெடுப்புக்களால் இந்து ராஜ்யங்களுக்குச் சொல்லொணாத் துயரம் ஏற்பட்டது.

இந்து அரசர்கள் தங்கள் வம்சங்களையும், ராஜ்யங்களையும் பாதுகாக்கச் சக்தியற்றவர்களாக இருந்தனர். ஆகையால், அவர்கள் ஒற்றுமையடையக் காரணமாயிற்று. முகம்மதிய படையெடுப்புக்களால் இந்துக்களுடைய மதம், கோயில்கள், நகரங்கள் நாசமடைந்தன. இக்காரணங்களால் இந்துக்கள் தங்கள் மதம், கோயில், நகரம் ஆகிய இவைகளைக் காக்க மிகவும் வசதியுள்ள ஓரிடத்தில் இந்த ராஜ்யத்தை ஏற்படுத்த முயன்றனர். இந்த ராஜ்யந்தான் விஜயநகர ராஜ்ய மென்ற மறந்துபோன சாம்ராஜ்யம்.

1336-ல் உழைப்பிற் சலியாத சகோதரர்களான ஹரிஹரர், புக்கர், இவ்விருவர்களும் துங்கபத்திரா நதியின் தென்கரையில் இயற்கையரண்களோடு கூடிய ஓரிடத்தில் இந்த ராஜ்யத்தை ஏற்படுத்தினர். சில சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இந்த ஹரிஹரரும் புக்கரும் கர்ணாடக ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 1327-ல் முகமத் துக்ளக் துவார சமுத்திரத்தைப் பாழாக்கினதிலிருந்து, இந்த இருவர்களும் புத்திசாலித் தனமாய்த் தப்பித்துத் துங்கபத்திரா நதியின் தென்கரையை அடைந்து அநேக மலைகளும் இயற்கை யரண்களும் கூடிய இடத்தில் இந்த ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள் என்றும் அபிப்பிராயப் படுகின்றனர். மற்றொரு சாரார் வாரங்கல் நாட்டை முகமத் துக்ளக் பாழ்படுத்தியபோது சான்கமாவின் (Sangama) புதல்வர்களான ஹரிஹரரும், புக்கரும் தப்பியோடிவந்து துங்கபத்திரா நதிக்கரையின் தென்பாகத்தில் இந்த ராஜ்யத்தை ஏற்படுத்தினர் என்று அபிப்பிராயப் படுகின்றனர். இந்த ராஜ்யத்தை ஏற்படுத்த சுமார் எட்டு வருஷங்களுக்கு மேலாயின.

இந்த ராஜ்யம் 1336-ல் ஸ்தாபிக்கபட்டதென்று ஏற்றுக்கொண்டால் மேற்கூறிய ஆசிரியரின் அபிப்பிராயமே மிகவும் சிறந்தது என நிச்சயமாய்க் கூறலாம். இதை ஒப்புக்கொள்ள இன்னும் அநேக காரணங்கள் உள்ளன. இந்த ராஜகுமாரர்கள் ராஜ்யத்தை ஏற்படுத்த மூல காரணமாயிருந்த தங்கள் குருவான வித்யாரண்யரின் பெயராலேயே வித்யாரண்ய ராஜ்யம் என்று பெயர் இட்டனர். பிறகு வந்த அரசர்கள் அதன் பெயரை விஜயநகர ராஜ்யமென்று மாற்றினர்.

இந்த ராஜ்யம் யாதவ வம்சத்தாராலும், சாளுவ வம்சத்தாராலும் துளுவ வம்சத்தாராலும் ஆளப்பட்டு வந்தது. இந்த ராஜ்யத்தின் முக்கியமான அரசர்கள், இரண்டாவது ஹரிஹரர், முதலாவது தேவராயர், நரசிங்க சாளுவர், கிருஷ்ணதேவராயர் முதலியோர் ஆவார்கள். கிருஷ்ணதேவராயர் காலத்தில்தான் முதன்முதலாகப் போர்த்துகீசியர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். இந்த ராஜ்யம் ராமராயர் என்பவரால் 1565-ல் நாசமடைந்தது. சிற்சில ராஜ்யங்கள் முகம்மதிய அரசர்களின் ஆதிக்கத்தில் இல்லாமல் இருந்தன. அவைகளில் முக்கியமானது சந்திரகிரி. இந்த ராஜ்யத்தின் சிறப்பைப் பற்றி யாத்ரிகர்கள் தங்கள் புத்தகங்களில், ராஜ்யம் எப்படி நடத்தப்பட்டது? ஜனங்கள் எவ்விதம் வாழ்க்கை நடத்தினர்? வாணிபம் எந்நிலைமையில் இருந்ததென்றும் கூறியிருக்கிறார்கள். யாத்ரிகர்களில் மிகவும் முக்கியமானவர்கள் நிக்கோலோ கண்டி (Nicolo Conti), அப்துல் ரஸாக், டாமின்கஸ் பியாஸ், பர்னஸ் நியூனிஸ் (Fernas Nuniz) முதலியோர்கள். இவர்களின் குறிப்புக்களிலிருந்து ராஜ்யத்தின் அமைப்பு, ஜனங்களின் வாழ்க்கை, கடைத்தெருவின் செல்வம், வியாபாரம் இவைகளை யறியலாம்.

இந்த ராஜ்யமானது 60 மைல் சுற்றளவு உள்ளதாயும், நல்ல கோட்டைகளோடு கூடியதாயும் இருந்தது. நிக்கோலோ கண்டி என்பவர் ராஜ்யத்தின் சுற்றளவையும் பாதுகாப்பையும் கண்டு, தாம் மிகவும் சந்தோஷப் படுவதாகக் கூறியிருக்கிறார். அப்துல் ரஸாக் என்பவர் இந்த ராஜ்யத்தைப்போல, தான் எங்கும் கண்டதில்லையென்றும், இனி காணப்போவதில்லையென்றும் கூறியிருக்கிறார்.

இந்நகரம் ஏழு கோட்டைகளுடன் கூடியது. முதற் கோட்டையைச்சுற்றி ஆறடி உயரத்திற்கு மேலுள்ள கற்கள் பூமியில் புதைக்கப்பட்டு எளிதாக விரோதிகளின் படைகள் வர முடியாமல் நடப்பட்டிருந்தன. முதற் கோட்டைக்கும் மூன்றாவது கோட்டைக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பு விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மூன்றாவது கோட்டையிலிருந்து ஏழாவது கோட்டை வரை உள்ள நிலப்பரப்பு கடைத்தெருக்களுக்காகவும், ஜனங்கள் வாசம் செய்வதற்காகவும ஒதுக்கப்பட்டது. அரண்மனைக்கு எதிரில் நான்கு கடைத்தெருக்கள் இருந்தன. அரசாங்கப் பேரவை தனியாக அரண்மனைக்கு அப்பால் நன்கு அமைக்கப் பட்டிருந்தது. கடைத்தெருக்கள் மிகவும் நீளமாகவும், அகலமாகவும் இருந்தன.

கடைத்தெருக்கள் வியாபாரப் பொருள்களுக்குத் தக்கபடி, அதாவது, பூக்கடைகள், மளிகைக்கடைகள், வைரக்கடைகள், வாசனைக்கடைகள் என்று தனித்தனியாக அமைக்கப்பட்டிருந்தன. ரோஜாப்பூக்கள் எங்கும் விற்கப்பட்டன. ரோஜாப்பூ இல்லாமல் தங்கள் வாழ்க்கையை ஜனங்கள் நடத்தவில்லை. ஜனங்கள் ரோஜா புஷ்பத்தைத் தங்கள் ஆகாரத்திற்கு ஒப்பாக மதித்தார்கள். நகைகள், முத்துக்கள் தாராளமாகவும், வெளிப்படையாகவும் விற்கப்பட்டு வந்தன. இதிலிருந்து நாம் அக்காலத்தில் விஜயநகரத்திலுள்ள ஜனங்கள் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள் என்பதை அறியலாம்.

அரண்மனைக்குப் பக்கத்தில் அரசாங்கப் பாதுகாப்பாளர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வசித்து வந்தனர். அரண்மனைக்கு இடது புறத்தில் நாணயச்சாலை இருந்தது. ஜனங்கள் தங்கள் சக்திக்குத் தகுந்தவாறு வைர நகைகளும், தங்க நகைகளும் முத்து நகைகளும் அணிந்திருந்தனர். ஆபரணங்களே இல்லாத ஜனங்களை இந்நகரத்தில் காணவே முடியாது. இச்சாம்ராஜ்யத்தின் ஜனங்கள் யாதொரு வித்தியாசமும் இன்றித் தங்கள் சமயத்திற்கு ஏற்றவாறு வாழ்ந்து வந்தனர். இந்துக்களின் திருவிழாக்கள் அரசரின் தலைமையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

விஜயநகர சாம்ராஜ்யத்தின் ஜனங்கள் ஏழ்மை என்ன என்பதைப் பற்றி அறிந்ததேயில்லை. குற்றங்கள் மிகவும் குறைவு. எல்லா மக்களும் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டு சோம்பலின்றி வாழ்ந்து வந்தனர்.

பியாஸ் என்பவர் விஜயநகரத்தைப் பற்றி நன்றாகக் கூறியிருக்கிறார். அவர் இந்த ராஜ்யத்தையே உலகத்தில் முதலாவதாகக் கருதுகிறார். லக்ஷம் வீடுகளுக்கு மேல் இருந்ததென்று கூறுகிறார்.

இந்த ராஜ்யம் அநேக ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒவ்வொரு அதிகாரியை அரசர் நியமனம் செய்தார். இந்த அதிகாரிகள் தங்கள் ஜில்லாவைத் தாங்களே அரசாண்டு இராயர்களுக்குக் கீழ்ப்படிந்தும், யுத்த காலங்களில் உதவி செய்தும் ஒற்றுமையாக இருந்தார்கள். இராயர்கள் ஒரு பெரிய சைன்யத்தை வைத்திருந்தார்கள். இந்தச் சைன்யத்திற்கு ஒவ்வொரு ஜில்லா அதிகாரிகளும் தங்கள் வருமானத்தில் ஒரு பங்கு கொடுத்து வந்தார்கள்.

நியாயம் வழங்க இக்காலத்தைப் போல, அக்காலத்தில் மன்றங்கள் கிடையா. ஜனங்களால் நியமிக்கப்பட்ட பஞ்சாயத்தார்கள் வழக்குகளைத் தீர்த்து நியாயம் வழங்கினர். தண்டனைகள் மிகவும் கடினம். திருட்டுக் குற்றங்களுக்குக் அவயவங்களை வெட்டிவிடுவது தான் தண்டனை. கொலைக் குற்றத்திற்கோவெனின் மரண தண்டனை. இராஜத்துரோகக் குற்றத்திற்கு குற்றவாளிகளின் தேகத்தில் கட்டைகளைக்கட்டி அவனைத் தெருத்தெருவாக இழுத்துச்சென்று அவமானப்படுத்தி மிகவும் கடுமையாக தண்டித்தார்கள். இக்காரணத்தினால் எவ்வித குற்றமும் செய்ய ஜனங்களுக்கு மனம் துணியவில்லை. இராஜ்யத்தில் ஒருவித குற்றமும் நடக்கவே கூடாது என்பதற்காகவே இவ்வித தண்டனைகளைக்கொடுத்தார்கள்.

அரசாங்கத்திற்கு முக்கிய வருமானம் நிலவரி. இதைத்தவிர சுங்கவரிகளும் வசூலிக்கப்பட்டன. தானியங்களை வாங்காமல் காலத்திற்கேற்ற விலையை அனுசரித்து வரியை வசூலித்து வந்தனர். மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லியபடி மக்களிடமிருந்து வரியை வசூலித்தனர்.

இந்த இராஜ்யத்தின் அரசர்கள் சம்ஸ்கிருத மொழியையும், தெலுங்கு மொழியையும் நன்கு போற்றி ஆதரித்தனர். தெலுங்கு மொழி அரசாங்கமொழியாக இருந்தது. முதலாவது புக்கர் காலத்தில் மாதவர், சயனர் என்ற இரண்டு புலவர்கள் மந்திரிகளாய் இருந்தனர். மாதவர் 'சர்வதர்சன சம்க்ரஹணம்' (Sarvadarsana-Samgraha) என்னும் நூலையும், சயனர் ருக்வேதத்திற்கு வியாக்யானமும், எழுதியிருக்கிறார்கள். தெலுங்குக் கவிகளில் அசலானி பெத்தன்ன என்பவரும், நந்தி திம்மன்ன என்பவரும் முக்கியமானவர்கள். கிருஷ்ண தேவராயர் காலத்தில் அப்பாஜி என்ற அறிவு பெற்ற மந்திரி இருந்தார். அரசர்கள் சிறந்த கவிஞர்களாகவும் அரசாட்சி செய்வதில் நிபுணர்களாகவும் இருந்தனர். கிருஷ்ணதேவராயர் 'ஆமுக்தமால்யதா' என்னும் நூலைத் தெலுங்கில் எழுதியிருக்கிறார். துளுவ வம்சத்தவர் அரசாண்டகாலத்தில் வைணவ மதம் ஓங்கியிருந்தது; சிற்பங்கள் உன்னத நிலையில் இருந்தன, அநேக ஆலயங்கள் கட்டப்பட்டன.

துளுவவம்சத்தார் அரசாண்ட காலத்தில் வியாபாரம் மேல்நாட்டுடன் நடந்துவந்தது. அரசர்கள் கல்வி கேள்விகளிலும், சிற்பங்களிலும் கருத்தூன்றிக் காலத்தைக் கழித்து வந்தனர்.

இவ்வளவு மேன்மை பொருந்தியதும், வெளிநாட்டார்களால் போற்றப்பட்டதுமான இந்நகரம் மதிகெட்ட மந்திரியான ராமராயர் என்பவரின் செயலால் 1565-ல் பாமினி சுல்தான்களால் அழிக்கப்பட்டு இருந்த இடங்கூடத் தெரியாமல் போய்விட்டது. இப்பொழுதும் 'ஹம்பி' என்ற ஊருக்குப்போனால் பல சின்னங்கள் காணப்படுகின்றன. இச்சின்னங்களால் தான் இந்த ராஜ்யத்தின் நினைவுவருகிறது. இக்காரணம்பற்றியே இதைச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் மறந்துபோன சாம்ராஜ்யமென்று கூறுகிறார்கள்.

S. B. சாரநாதன்

ஆமைகள்

ஆமைகள் என்ற தலைப்பைக் கண்டு வியப் படைவீர்கள் என்று எண்ணுகிறேன். இத் தலைப்பு சாதாரணமாக, ஓர் உயர்ந்த கதையாக இருக்கும் என்று நீங்கள் எண்ண வேண்டாம். நீங்கள் இதைப் படிப்பதற்கு முன்பு ஓர் அறிவியற் கட்டுரை இது என்பதைக் கூறி விடுகிறேன்.

"ஆமை கிணற்றைக் கெடுக்கும், ஊமை ஊரைக் கெடுக்கும்" என்பார்கள். அவ்வித ஆமைகளைப் பற்றியதன்று இந்தக் கட்டுரை. எனவே எதைத் தான் ஆமைகள் என்று குறிப் பிடுகிறீர்கள் என்று உங்கள் உள்ளம் கேட்கத் துடிக்கும். அதுமட்டுமல்ல நீங்களும் ஆமை நகருவது போல விஷயத்தை வெளியிடமாட் டேன் என்று இழுத்துக் கொண்டே போகிறீர் களே என்றும் கேட்கலாம். 'அவசரப்படாதீர் முயலாரே,' என்று கூறிவிட்டு ஆரம்பிக்கிறேன்.

நான் கூறும் ஆமைகள் நாட்டிலே நடமாடி, நாசம்செய்துவரும் ஆமைகள்தான். கல்லாமை, தீண்டாமை, இல்லாமை, பொறாமை என்பவை தாம். இன்று நாட்டிலே கல்லாமை புகுந்து அறிவுக்கண்ணற்ற கபோதிகளை ஏராளமாக உண்டாக்கி விட்டது. அதன் பலன் தான் இன்று நாட்டிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் கல்வி அறிவு வாய்க்கப் பெறாதவர் களாய் இருக்கின்றனர். இதைப் போலவே தீண்டாமை ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் தோன்றி இன்று லட்சக்கணக்கான ஆமைகளை உண்டாக்கி விட்டது. இவ்வகையான ஆமைகளைக் கொல்ல காந்தி அடிகள் ஓர் அழு கான திட்டம் வகுத்தார். அதன் வழிச்சென் றால் இவ்வாமைகள் உண்மையில் ஒழிந்துவிடும் என்பதில் சிறிதேனும் ஐயமுண்டோ?

மூன்றாவதான இல்லாமை பத்து ஆண்டு களுக்கு முன்னால் மனிதன் முட்டாள் தன மாக நடந்து கொண்டதின் விளைவுதான். இல் லாமைக் கொடுமையினால் இன்று நாட்டிலே உணவு, உடை முதலியவைகள் உருத்தெரியா மல் இருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இதன் கொடுமையையும் இதன் வம்சத்தையும் ஒழிக்க எல்லோரும் துன்பங் களைப் பொறுத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்கும் வேலையில் ஈடுபட வேண்டும். உற் பத்தி செய்வோருக்கு நாம் உதவ முன் வந்தால் நாடு நன்னிலையை எய்தும் என்பதில் ஐயம் இல்லை.

கடைசியாக உள்ள கொலைகார ஆமை இருக் கிறதே அதுதான் அந்தப் பொறாமை என்பது. அந்தக் கொடுமையைப் பற்றி என்ன வென்று சொல்வது? அது பொறுக்க முடியாத வேதனை யை அளித்திருக்கிறது; அளித்து வருகிறது. இதைத் தொலைக்க அன்பு என்னும் ஆயுதத்தை அகம் என்னும் வில்லிலே பூட்டி எறிந்தால் பூரண வெற்றியை நாம் அடைவோம்.

ஒழிக இந்த ஆமைகள். வாழ்க சமுதாயம்.

ஸ்ரீ. சாவித்திரி
ஆறும் பாரம் முதற்பிரிவு.

மின்சாரம்

இக் காலத்தில் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மின்சாரம் உபயோகப் படுகிறது, நமது வீட்டிலும் வெளி இடங்களிலும் மின் சாரம் நமக்குச் செய்து வரும் நன்மைகள் பல. மின்சாரம் ஒலி, ஒளி, வெப்பம் முதலியவை களைப் போல உலக மெங்கும் பரவியிருக்கிறது. இப்பொருள் இயற்கையோடு இயற்கையாகக் கலந்து மறைந்திருக்கிறது. இது மற்றப் பொருள்களைப் போல் கண்ணுக்கு வெளிப் படையாகத் தெரியக் கூடியதன்று. அதனால் இதன் சக்தியை, காற்றை உணருவது போல, அது செய்யும் அற்புதமான வேலைகளைக் கொண்டுதான் நாம் அறிந்து கொள்ள இயலும்.

மின்சாரத்தைப்பற்றிப் பலகாலமாக ஆராய்ச்சி செய்து வந்த பெரியோர்கள் பலர். அதனைப்பற்றித் தெளிவான அறிவு ஏற்பட்டுச் சுமார் நூற்றைம்பது வருஷங்களாகின்றன.

ஆனால் அதற்குள் இம் மின்சாரத்தின் பலவகை ஆற்றலையும் நன்கு உணர்ந்த விஞ்ஞானிகள் அதனைக் கொண்டு கண்டு பிடித்த அற்புதப் பொருள்கள் பல. நீராவி யந்திரத்தினாலும் எண்ணெய் ஆவியாலும் ஓடிய யந்திரங்கள் செய்யும் வேலைகள் பலவற்றையும் இக்காலத்தில் மின்சாரம் செய்கிறது. இன்றைய உலகில் மிகச் சாதாரணமான காரியங்கள் முதல் பெரிய காரியங்கள் வரை எல்லாமே மின்சாரத்தால் நிகழ்கின்றன. இக்காலத்தை மின்சாரகாலம் என்று சொல்லுதல் மிகப் பொருத்தமானது.

விஞ்ஞானிகள் பலர் தொடர்ந்து செய்து வந்த ஆராய்ச்சிகளின் பலனாக மின்சாரத்தைச் செயற்கையாகச் செய்து கொள்ளும் முறைகள் பல அறியப் பெற்றன. தந்தி சாலைகளில் தந்தி அடிக்க உதவும் மின்சாரம் மின்கலங்களின் மூலமாகத் தோன்றும் மின்சாரமாகும். மின்சார விளக்கு டெலிபோன் போன்றவைகள் டைனமோ மின்சாரத்தால் ஒட்டப்படுகின்றன. மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செம்புக் கம்பியின் மூலமாகக் கொண்டு செல்லுகிறார்கள். இதைத் தொட்டால் அபாயம் ஏற்படும். இச்சக்தி ரப்பர் போன்ற பொருள்களில் பாய்வதில்லை. இதனால் தான் வீட்டிற்குள்ளே ரப்பர் முதலியவற்றால் மூடிய கம்பிகளைப் பொருத்துகின்றனர்.

நமது வீடுகளில் ஒரு ஸ்விட்சைத் தட்டினால் விளக்கு எரிகிறது. விசிறி வீசுகிறது. மணி அடிக்கிறது. நீர் இறைக்கிறது. நெருப்புக்குப் பதிலாக இம் மின்சாரத்தை சமையலுக்கும் உபயோகப் படுத்தலாம். துணிகளுக்கு இஸ்திரி போடவும் இது உதவுகிறது. பெரிய கட்டிடங்களில் மாடிகளுக்குத் தூக்கிச்செல்லும் கருவியிலும் இது வேலை செய்கிறது.

இரவில் ஒளி தரும் சக்தியாகவும் உள்ளது இம் மின்சாரம். பற்பல நகரங்களில் இரவைப் பகலாகச் செய்கிறது. ரயில்களிலும், கப்பல்களிலும் அமைக்கப்பட்டுள்ள விளக்குகள் இதன் சக்தியாலே தான் ஒளி வீசுகின்றன.

மேல் நாடுகளில் மின்சாரத்தை வாழ்க்கையில் மிகவும் பயன்படுத்தியுள்ளார்கள். அமெரிக்காவில் இதைக் கொண்டு பற்பல காரியங்களைச் செய்துகொள்கிறார்கள். உழுதல், பரம்படித்தல், விதைத்தல், தண்ணீர்ப் பாய்ச்சுதல் முதலிய விவசாய வேலைகளுக்குக்கூட இம் மின்சாரம் பயன்படுகிறது

ட்ராம் வண்டியும் இதன் சக்தியால் ஓடுகிறது. மின்சார விசையால் ஓடும் வண்டிகளைச் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் காணலாம். இவ் வண்டிகள் தண்டவாளங்களின் மேல் ஓடுகின்றன. வண்டிகளுக்கு மேலே மின்சாரம் ஓடும் கம்பிகளை அமைத்திருக்கிறார்கள். இக்கம்பிகளைத் தொட்டுக் கொண்டே ஓடும்படியான ஒருவகை அமைப்பு வண்டியிலும், எஞ்சினிலும் அமைந்திருக்கிறது. இந்த இணைப்பின் மூலமாக யந்திரத்திற்கு மின்சாரம் பாய்ந்து வண்டியை இயக்குகிறது. சென்னையிலிருந்து தாம்பரம் வரையில் மின்சார ரயில் ஓடுகிறது. இது போன்று பூனாவிலிருந்து பம்பாய்வரையிலும் மின்சார ரயில் ஓடுகிறது.

ரேடியோவை ஒலிக்கச் செய்து பல நூறு மைல்களுக்கப்பால் பேசும் பேச்சுக்களையும் பாடும் பாட்டுக்களையும் நமக்குக் கேட்கச்செய்கிறது. மின்சாரம் மேலும் உலக முழுவதிலுமுள்ள செய்திகளை உடனுக்குடன் வெளியிடுகிறது. ஓரிடத்திலிருந்தபடியே வேறொரு இடத்திலிருக்கும் உற்றார் உறவினர்களோடு டெலிபோன் என்ற கருவியின் மூலம் பேசமுடிகிறது. தூரமான இடங்களுக்குத் தந்தி மூலம் செய்தியைத் தெரிவிக்கிறது. கம்பியில்லாமல் வெகு தூரம் செய்திகளைக் கொண்டு செல்லவும் இது உதவுகிறது. பல மைல்களுக்கப்பால் பேசுகிறவர்களைப் பார்க்கச்செய்யும் டெலிவிஷன் என்ற அமைப்பும் இப்பொழுது இதன் உதவியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாம் இன்பமாகப் பொழுது போக்கிக் கொண்டு களிக்கும் பேசும் படக் காட்சிகளும் மின்சாரத்தின் விளைவே.

மின்சாரத்தினால் விளைந்துள்ள பயன்கள் மிகப் பல. இன்னும் இதனால் என்னென்ன அற்புதங்கள் தோன்றக்கூடும் என்று யாரால் அளவிடமுடியும்?

R. விசாலம்

IV Form B.

கரையான் தோன்றின கதை

ஒரு ஊரில் சுப்பையா என்று ஒருவர் இருந்தார். அவர் மனைவியின் பெயர் சீதம்மாள். அவர்களுக்குக் கௌரி, சுசீலா, சாந்தா என்று மூன்று பெண்கள் இருந்தனர். அவர்களுக்கு வயது வந்ததும் தகுந்த இடத்தில் திருமணம் செய்வித்தனர். கௌரியின் புருஷனுக்குப் போலீஸ் இலாகாவில் வேலை. சுசிலாவின் கணவன் ஒரு பெரிய வக்கீல். மூன்றாவது பெண்ணினுடைய கணவன் ஒரு ஜமீந்தார்.

இவர்கள் இன்பமாய்க் கணவன்மார்களுடன் வாழ்ந்து வரும் நாளில், மூன்று பெண்களும் தாய் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். தாய் காரணம் கேட்குமுன்பே மூத்தவளாகிய கௌரி, "ஐயோ! அம்மா என்புருஷன் செய்யும் கொடுமைகளை நான் என்னென்று சொல்வேன். நானும் என்புருஷனும் ஒருநாள் நிலவொளியில் ஒரு மகிழ மரத்தின் கீழ் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கும் பொழுது மரத்திலிருந்து ஒரு சிறிய புஷ்பம் என்முகத்தில் விழுந்தது இதை அவர் கவனித்தும் மரியாதைக்குக்கூட புஷ்பம் விழுந்ததே வலிக்கிறதா என்று ஒரு வார்த்தைகூட கேட்கவில்லை. இப்படிப்பட்ட மனிதருடன் நான் எப்படி இருப்பேன் அதனால் வந்து விட்டேன்", என்று கூறி அழுதாள்.

இரண்டாவது பெண்ணோ, "அம்மா எனக்கு என் கணவர் ஒரு நெக்லஸ் வாங்கிக் கொண்டு வந்து அதை என் கழுத்தில் போட்டார். போட்டு அழகு பார்த்தாரே ஒழிய நெக்லஸ் அணிந்து கொண்டிருக்கிறாயே அது உன் கழுத்தை உறுத்துகிறதா என்று ஒரு வார்த்தைக் கேட்டாரா? கேட்கவே இல்லை. இப்படிப்பட்ட மனிதருடன் எப்படி வாழ்வது" என்று கூறி அழுதாள்.

இதற்குள் மூன்றாவது பெண், "அம்மா! அம்மா!! என் மாமியார் என்மேல் மிகவும் அன்பாயிருந்தாள். சென்ற வெள்ளிக்கிழமை யன்று என் மாமியார் எனக்கு எண்ணெய் ஸ்நானம் செய்வித்து என்னை நன்றாக அலங்கரித்தாள். பிறகு அன்று மாலையில் என் மாமியார் (எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு) என்னிடம் வந்து சாந்தா நான் கோவிலுக்குப் போய் வருகிறேன். நீ விளக்கு ஏற்றி வை என்று சொல்லிவிட்டுப் போனாள். இதைக்கேட்டதும் எனக்குத் துக்கம் தாளவில்லை. ஏனென்றால் விளக்கு ஏற்றி வைக்கும்படி என்னை மாமியார் அதிகாரம் செய்ததுதான் என் மனதைத் துன்புறுத்தியது. இப்படி அதிகாரம் செய்யும் மாமியாருடன் வாழ்வது எனக்குப் பிடிக்கவில்லை", என்று அழுதுகொண்டே கூறினாள்.

இதற்குள் சீதம்மாள், "நீங்கள் கூறுவதுகூட பரவாயில்லை. உங்கள் தகப்பனார் செய்யும் கொடுமைகளை என்னால் பொறுக்க முடியவில்லை. முன்பு ஒரு நாள் ஒருபடி உளுத்தம் பருப்பு கொண்டு வந்து கொடுத்து" தோசை செய்து வை என்றுகூறி குளிக்கச்சென்றார் ஒருபடி பருப்பில பெரியதாக மூன்றுதோசை செய்தேன். மிகவும் ருசியாக இருந்ததால் மூன்று தோசைகளையும் நான் சாப்பிட்டு விட்டேன். உங்கள் தகப்பனார் குளித்துவிட்டு வந்து தோசையைக் கேட்டார். நானே மூன்று தோசைகளையும் சாப்பிட்டுவிட்டேன் என்று கூறினேன். அதைக் கேட்டும் அவர் வயிறு வலிக்கவில்லையா என்று கூடக் கேட்கவில்லை. அதனால் நாம் நால்வரும் காட்டிற்குச் சென்று தவம் செய்வோம்", எனக் கூறிக் காட்டிற்குச் சென்று தவம் செய்தனர். தவத்தில் விஷ்ணு தோன்றி, "உங்களுக்கு என்ன வேண்டும்"; என்று கேட்க, "எங்களுக்கு, நல்ல கணவர் வேண்டும்" என்று கேட்டனர். அதற்கு விஷ்ணு, "நீங்கள் கணவரைக் கரையான் போல் அரித்தீர்கள், அதனால் இன்றிலிருந்து நீங்கள் கரையானாகக் கடவது", என்று சபித்து மறைந்துவிட்டார். அன்றிலிருந்து அவர்கள் நால்வரும் கரையானாகி விட்டார்கள்.

By

N. A. Rajalakshmi,
III Form E. S.

பரமசிவன் விஷம் அருந்தியது ஏன் ?

சிவனுடைய பிள்ளை கணபதி, அந்தக் கணபதியின் வாகனம் ஒரு சுண்டெலி. அதை எப்பொழுது சாப்பிடலாம் என்று காத்திருக்கிறது சிவனின் கழுத்தைச் சுற்றியுள்ள நாகப் பாம்பு. அந்தப்பாம்பை விழுங்குவதற்குக் குறிபார்த்துக் கொண்டிருக்கிறது முருகனின் வாகனமாகிய மயில். பின்னும் பார்வதியின் சிங்கம் கணேசனின் யானைமுகத்தை விழுங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்தத் தொல்லைகள் போதவில்லை போலும்! சிவனின் இரு மனைவியர்களாகிய பார்வதியும், கங்கையும் ஒருவரையொருவர் விரோதித்துக் கொண்டிருக்கின்றனர். இது மட்டுமல்ல, சிவனது தலையில் சிறந்து விளங்கும் குளிர்ச்சியே உருக்கொண்ட சந்திர கலையானது நெற்றிக் கண்ணின் அக்கினி தாகத்தை சகிக்க முடியாமல் தவிக்கின்றது. இவ்விதமுள்ள குடும்பக் கலகத்தைப் பொறுக்க மாட்டாமல் மனம் நொந்தவராய்ச் சிவனும் விஷத்தை அருந்தினர்.

By

V. K. Janaki,

II Form E.

காலத்தின் அருமை

உலகில் சிலர் கல்வி அறிவுள்ளவராயும், சிலர் பலசாலியாகவும் சிலர் பலவீனமாகவும், சிலர் ஏழைகளாகவும், சிலர் பணக்காரர்களாகவும் இருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம், காலத்தின் அருமை, பெருமைகளை அறிந்து அதனைச் சரியான முறையில் பயன் படுத்திக் கொண்டமையும், பயன்படுத்திக் கொள்ளாமையுமே ஆகும் என்பது ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டிய உண்மையாகும். ஆனல் சிலர் இவற்றிற்கெல்லாம் தலைவிதிதான் காரணம் என்று மேற்போக்காகக் கூறிவிடுவர். ஊன்றிப் பார்த்தால் அவ்வாறு கூறுவது அடாதுஎன்பது அவர்களுக்குத் தெரியவரும். இல்லை என்றால் திருவள்ளுவர்.

> "ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
> கருதி யிடத்தாற் செயின்."

என்று கூறுவாரா? ஆதலால் அவனவன் உயர்வுக்கும், தாழ்வுக்கும், காரணம் காலத்தின் அருமையை அறிவதும், அதை அறியாமையுமே ஆகும் என்று அறிக.

ஆங்கிலத்தில் காலத்தின் அருமையைப்பற்றி ஒரு பழமொழி வழங்கி வருகிறது. அது "Time is gold" என்பது. இதன் பொருள் "காலமே தங்கம்" என்பதாம். இப்படி சொற்கள் அமைந்த நிலையை நன்கு சிந்திக்க வேண்டும். காலமே தங்கம், என்று காலத்தைப் பொன்னாக்கினர். பொன் செய்யும் மருந்து காலம் என்பது, இப்படி மொழியின் கருத்தாம். காலத்தின் அருமை தெரிந்து அதனைப் போற்றுபவனே கற்றவன் என்றும், அறிஞன் என்றும் கருதப்படுவோன்; தனக்கும் பிறருக்கும் நன்மை தேடுபவனுவான். பொருளைச் சம்பாதிப்பதற்குரிய வழியைக் கண்டவனுவான். இவன் எப்போதும் சுறுசுறுப்புள்ளவனாகவும், எந்த வேலைசெய்வதற்கும் பின்னடையாதவனாகவும் விளங்குவான்.

காலத்தின் அருமையை அறியாதவன் உலகில் ஒரு பயனையும் அடையான். அவனைக் கொலைஞன் என்றும் கூசாமல் கூறிவிடலாம். ஏன்? அவன் விலை மதிக்க முடியாத காலத்தை வீணாகக் கழித்துக் கொலை செய்கிறானன்றோ? எந்தப் பொருளை அழித்தாலும், அதனை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆனல் உயிரை அழித்து விட்டால் மீண்டும் பெற இயலாது.

அதுபோன்றதே காலமும். நாம் வீணாகக் கழிந்த காலத்தை மீண்டும் அடையமுடியாது. காலத்தின் அருமையை அறியாது சோம்பி இருப்பவன் அறிவு பெருகாது. அவன் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்து விட்டு, அதனைச்செய்து முடிக்க இயலாது, அதனைச் செய்ய நேரமில்லையே என்று வருந்துவான்.

இஃது அறியாமை! இது விதைக்க வேண்டிய நாட்களில் வீட்டில் உறங்கிவிட்டு, அறுக்க வேண்டிய காலத்தில் அரிவாள் கொண்டு போகிறவன் செயலுக்குச் சமம் அன்றோ? இன்றைக்குச் செய்யும் வேலையை நாளைக்குச் செய்யலாம் என்றுவிட்டுவைத்தல் ஆகாது.

நாளை, நாளை என்றால் அது நம்முடைய நாளாக இருக்குமோ அல்லது எமனுடைய நாளாக இருக்குமோ? நம்மால் சொல்ல இயலாது! மேலும், நாள் வாரமாகவும், வாரம் மாதமாகவும், மாதம் வருடமாகவும் பெருகிக் கழியும். இதனால் தொடங்கிய காரியமும் முற்றுப் பெறாது போகும். இம்மட்டோ! காலத்தின் அருமை அறியாதவன் மனம் பல விதத் தீய எண்ணங்கள் புகுவதற்கும் இடமாகும்.

இங்ஙனம் காலத்தின் அருமையை அறிவதனால் ஏற்படும் நன்மைகள் கண்ணெதிரே பார்க்கிறோம். ஆகையால் அதனை மக்கள் நன்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டும்; தேனீ, எறும்பு முதலிய பிராணிகளை உற்று நோக்கியேனும் அறிவு பெருதல் வேண்டும். ஒருவன் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு வினாடியில் வீண் காலங்கழியும் தன் ஆயுளைக் கொலை செய்வதாகக்கருத வேண்டும். காலம் ஒரு நற்கருவி என்று ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே உலகில் ஒவ்வொருவரும் உண்மையில் இன்பம் பெற விரும்பினால், மேற்சொன்ன முறைகளை அனுசரித்து நடப்பாராக!!

S. Rathi Devi,
IV Form E. S.

இந்திய நாடு

அடிமையாகி அல்லற்பட்ட இந்திய நாடு
ஆங்கிலேயர் ஆட்சி செய்த இந்திய நாடு
இணையில் இதிகாசம் பெற்ற இந்திய நாடு
ஈறில்லாமல் ஈகை செய்யும் இந்திய நாடு
உள்ளத்திலே கள்ளமில்லா இந்திய நாடு
ஊக்கத்தினால் உயர்ந்த இந்திய நாடு
எண்ணிறந்த பெரியர் வாழ்ந்த இந்திய நாடு
ஏதமிலாக் கலை நிறைந்த இந்திய நாடு
ஐயமிட்டு ஆக்கந்தேடும் இந்திய நாடு
ஒருவருக்கும் ஊறு செய்யா இந்திய நாடு
ஓரமெங்கும் கடல் ஒலிக்கும் இந்திய நாடு
ஔவியம் இலாதோர் ஆளும் இந்திய நாடு

R. Bhagirathy
V Form A. S.

விடுகதைகள்

1. நடக்கமாட்டாதவன் வீட்டிற்கு
உட்கார மாட்டாதவன் போனான்
(மரம், வௌவால்)

2. நெட்டைக் காலனுக்கு உருண்டைத்தலை
அது என்ன? (தீக்குச்சி)

T. Lalitha
III Form B. S.

1. முன்னே பின்னே ஆடாமலே
மூச்சுத்தானும் காட்டாமலே
சென்னைப் பட்டினம் தனிலிருந்து
சிறந்த பம்பாய் போகுது. அது என்ன?
(தண்டவாளம்)

2. நீரிலே விளையும் பூ. நிலத்திலே
வேரோடாப் பூ ஊரெல்லாம் உலாவும் பூ,
உகந்த கொண்டைக்கு ஆகாப் பூ
என்னப் பூ (உப்பு)

3. குளத்திலே விளையாப்பூ, அகத்திலே
விளையும் பூ; நயத்திலே விளையும் பூ;
நாட்டோர்கள் கொண்டாடும் பூ;
இகத்திலே பூக்கும் பூ; நண்பர்கள்
கொண்டாடும் பூ; சோலையிலே பூவாப் பூ;
அது என்ன பூ (அன்பு)

4. வெள்ளை நிலத்தில் கறுப்பு விதையைக்
கையால் விதைத்து வாயால் பொறுக்க
வேண்டும் (காகிதத்தில் எழுத்து)

R. S. Vedavalli
VI Form A. S.

1. வாராதிருந்து வந்தீரே வந்து விட்டு
போனீரே, போயும் திரும்பி வந்தீரே
இனிமேல் சென்றால் வருவீரோ (பல்)

2. மூத்தக்கருப்பனை அழையடா
முதுகுத்தோலை உரியடா
பச்சை வெண்ணெயைத் தடவுடா
மச்சுக்குள்ளே அடையடா (தாம்பூலம்)

K. Kalyani
IV Form E.S.

1. நாலு கால் உண்டு வீச வாலில்லை,
(நாற்காலி)

R. Sarayu
III Form E. S.

பெனிஸிலின்

பாக்டீரியா என்பது கண்ணுக்குத் தெரியாத கிருமிகள். இவைகளைப் பூதக்கண்ணாடியின் (Microscope) மூலமாகத்தான் பார்க்க முடியும். இந்தப் பாக்டீரியா 300 வருஷங்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அவைகளில் சில வியாதியை உண்டாக்குகின்றன என்றும், சில நன்மைகள் செய்கின்றன என்றும் ஒரு பிரஞ்சு விஞ்ஞானியான லூயி பாஸ்டர் என்பவர் சுமார் 100 வருஷங்களுக்கு முன்பு கண்டுபிடித்தார். வியாதிகள் இரு முறைகளில் பரவுகின்றன. ஒன்று ஒரு மனிதனிடமிருந்து மற்றொரு மனிதனுக்குப் பரவுகிறது. இரண்டாம்முறை மனிதனைத்தவிர மற்றப் பொருள்களின் மூலமாகப் பரவுகிறது. மனிதனிடம் இருந்து மனிதனுக்குப் பரவும் வியாதி மிகவும் கொடூரமானது மதகுரு கிர்ச்சர் என்பவர் 1671-ம் வருஷம் பிளேக் என்ற வியாதியினால் கஷ்டப்பட்டு கொண்டிருந்தவர்களின் ரத்தத்தைப் பரிசோதித்தார். அதில் அவர் புழு போன்ற மிகவும் சிறிய கிருமிகளைப் பார்த்தார். ஆனால் அச்சமயத்தில் அவருக்கு அக்கிருமிகள் தான் பிளேக்கிற்கும் காரணம் என்று நிச்சயமாய்த் தெரியவில்லை. ஆனால் பாக்டீரியாவைப் பற்றிய செய்திகள் எல்லாம் பூதக்கண்ணாடி (Microscope) கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் தான் விவரமாகத் தெரிய வந்தன.

இவ்வாறாகப் பல விஞ்ஞானிகள் கிருமிகளின் மீது பரிசோதனை செய்து வந்தார்கள். ஆனால் முதல் மகா யுத்தத்தின்போது கிருமிகளைப் பற்றிய விஷயங்களை அறிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. 1916 முதல் 1918 வரையில் "காஸ் காங்கரீன்" (Gaze Gangrene) என்ற வியாதியும், மூளைக் கோளாறும் கிருமிகளினால் ஏற்படுகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டது. 2-ம் உலக மகாயுத்தத்தின் போது தான் "பெனிஸிலின்" னைப்பற்றி ஆராயச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பெனிஸிலின் அலெக்ஸாண்டர் பிளெமின் என்ற இங்கிலாந்து விஞ்ஞானியால் 1629-ம் வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது.

பெனிஸிலின் காளான் வகையிலிருந்து கண்டுபிடிக்கப் பட்டது. இக்காளானுக்குப் பெயர் "பெனிஸிலின் நோடேட்டம்". Penicilin (Notatom) இப்பெனிஸிலின் அநேகமாக எல்லாக் கிருமிகளையும் தாக்குகின்றது. இப்பெனிஸிலின் கண்டுபிடிப்பதற்கு முன்பு கிருமிகளினால் ஏற்படும் வியாதிகளினால் இறந்தவர்களின் எண்ணிக்கைக் கணக்கில் அடங்கா. ஆனால் இப்பெனிஸிலின் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு அநேகமாக எல்லா வியாதிகளையும் தடுக்க முடிகிறது. இப்பெனிஸிலினில் அநேக வகைகள் உண்டு. (பாக்டீரியாவிலும்) கிருமிளிலும் அநேக விதங்கள் உண்டு.

பெனிஸிலின் ஸ்டெபைலோ (Staphyllo Cocci), ஸ்டெப்டோ (Strepto Cocci), கோனா (Gono Cocci) நியுமோ (Pneomo Cocci) மெனிங்கோ (Menigo Cocci) இவைகளைத் தாக்குகின்றது. இவைகளுள் ஸ்டெபைலோகாகை என்பது எல்லாக் கிருமிகளைக் காட்டிலும் அதிகமாக எல்லா இடங்களிலும் காணப்படும். இது சில சரும வியாதிகளையும், கட்டிகளையும் (Carbuncle) சில நுரையீரல், எலும்பு, காது, சிறுநீரகம், வயிறு இவைகளில் சில துன்பங்களை விளைவிக்கும். ஸ்டெப்டோ என்பது நிணநீர் (Limphatics) குழாய்களை அடைத்து எரிஸபிளாஸம் (Erisepalas) என்ற தொத்து வியாதியை உண்டாக்குகிறது. மேலும் "ஸ்கார்லெட் ஜுரம்" (Scralet Fever) என்ற ஒருவகை ஜுரத்தையும் உண்டாக்குகின்றது. நியுமோ காகை என்பது நிமோனியா என்ற ஜுரத்தை உண்டாக்குகிறது; மூளை ஜுரத்தையும் உண்டாக்குகிறது. இவைகளுக்கெல்லாம் பெனிஸிலின் நல்ல மருந்து. பெனிஸிலினால் தான் இவைகளைத் தடுக்கமுடியும், பெனிஸிலினைப் போன்று இன்னமும் சில Anti-biotic கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆரியோ மையசின் (Aureo Myecin) என்ற மருந்து இளம்பிள்ளைவாதம், போன்ற வியாதிகளுக்குக் கொடுக்கிறார்கள். குளோரோ மைசடின் (Chloro Mycetin) என்ற மருந்து டைபாய்டு ஜுரத்திற்குக் கொடுக்கிறார்கள். இதனால் அநேகமாக எல்லா டைபாய்டு வியாதிக்காரர்களும் குணமடைகின்றனர். ஸ்டெப்டோ மையசின் (Strepto Myecin) என்ற மருந்து டி. பி. (Tuberclousis)க்கும், ஸ்டெப்டோ கிருமிகளினால் உண்டாகும் வியாதிகளுக்கும் கொடுக்கிறார்கள்.

பெனிஸிலின் பாக்டீரியாவைக்கொல்வதில்லை ஆனால் பாக்டீரியா எண்ணிக்கை அதிகரிக்காமல் தடுக்கிறது. இதற்குப் 'பாக்டீரியா ஸ்டாட்' (Bacteria Stat) பெனிஸிலின் பாக்டீரியா செல்லை சூழ்ந்து கொண்டு அதிகரிக்காமல் தடுக்கிறது. பெனிஸிலின் வாயின்மூலம் உட்கொள்ளலாம். இன்ஜெக்ஷன் மூலமாகவும் உள்ளே செலுத்தலாம். அபாயகரமான சமயங்களில் இன்ஜெக்ஷன் முறையே சிறந்தது. உள்ளே செலுத்தப்படும் பெனிஸிலின் வெகு சீக்கிரத்தில் ரத்தத்தினல் உறிஞ்சப்பட்டு நன்மையை அளிக்கும். ஆனால் அது வெகு சீக்கிரத்தில் சிறுநீரின் மூலமாக வெளியேற்றப் படுகிறது.

ஒரு டோஸ் (Doze) பெனிஸிலின் சுமார் 4 மணி நேரத்தில் வெளியேற்றப்படுகிறது. ஆகவே 4 மணி நேரத்திற்கு ஒருமுறை பெனிஸிலின் இன்ஜெக்ஷன் கொடுக்க வேண்டும். வாயின் மூலமாக உட்கொள்ளும்போது பெனிஸிலின் வெறும் வயிற்றில் உட்கொண்டால் அது சீக்கிரத்தில உறிஞ்சப்பட்டுப் பலனை அளிக்கும். வாயின் மூலமாக உட்கொள்ளும் பொழுது பெனிஸிலின் திரவப் பொருளாக இருக்க வேண்டும். திரவமாக் இருக்கும் பெனிஸிலின் நல்ல பலனை அளிக்கும். (Gastic Jose) இரைப்பை நீர் இரைப்பையின் அமிலத்தின் மதிப்பு PHக்கும் கீழே இருந்தால் பெனிஸிலின் பலனை இழந்து விடும். அநேகமாக பெனிஸிலின் சிறுகுடலின் மேல்பாகத்தில் உறிஞ்சப்படுகிறது.

பெனிஸிலின் பெனிஸிலிநேஸ் என்ற பொருளால் அழிக்கப்பட்டு விடுகிறது. ஆனால் பெனிஸிலின் பெனிஸிலிநேஸினல் சிறுகுடலின் மேல் பாகத்தில அழிக்கப்படுவதில்லை. அவ்வாறு அழிக்கப்பட்டாலும் அது மிகவும் குறைந்த அளவில் தான் அழிக்கப்படுகிறது. பெனிஸிலின் கூட க்ளுகோஸ் (Glucose) கொடுத்தால் நல்ல பலனை அளிப்பதுடன் நல்ல சக்தியையும் அளிக்கிறது. பெனிஸிலின் அதிக நேரம் உடலில் தங்குவதற்கு எண்ணெயுடன் கலந்து தயாரிக்கப்படுகிறது. இதனல் இது அதிக நேரம் உடலில் தங்கிப் பலனை அளிப்பதுடன் மிகவும் சிக்கனமான முறையிலும் பெனிஸிலின் உபயோகிக்கப்படுகிறது. இதனல் அதிக பெனிஸிலின் இன்ஜெக்ஷன் தேவையில்லை.

S. V. Hemavathy, VI-A.

பாவம் ! புலவர்.

கவிஞன் ஒருவன் தனவான் ஒருவனிடம் சென்று அவனை அதிகமாய் புகழ்ந்து பேசினன். அதனல அவன் சந்தோஷமடைந்து சொன்னதாவது: "ஐயா என்னிடத்தில் இவ் வேளையில் பணம் இல்லை, ஆனல ஏராளமான தானியம் இருக்கிறது. நீ நாளைய தினம் வந்தால் நான் உனக்குக் கொஞ்சம் தானியம் கொடுப்பேன்" என்று கூறப் புலவன் சந்தோஷத்தோடு விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டான்.

அந்தத் தனவந்தரின் சொல்லை நம்பி மறுநாள் அதிகாலையில் திரும்பவும் அந்தப் பணக்காரனிடம் போனன். அவன் புலவன் வந்ததற்குக் காரணம் கேட்டான். அதற்குப் புலவன் "நேற்றைய தினம் நீங்கள் கொஞ்சம் தானியம் கொடுப்பதாகக் வாக்கு கொடுத்தீர்களே அதற்காக வந்திருக்கிறேன்" என்றான். அதற்கு அந்தத் தனவந்தன் 'நீ ஒரு பெரிய மூடன்; நீ என்னை வார்த்தைகளால மகிழ்ச்சியடையும்படி செய்தாய். நானும் அப்படியே சந்தோஷப் படுத்தினேன். ஆதலால் நான் ஏன் உமக்குத் தானியம் கொடுக்கவேண்டும்" என்றான். புலவர் வெட்கிப் போய்விட்டார்.

P. தனகோடி,
VI-A.

"கடவுள் வாழிடம்"

அன்று கிறிஸ்துமஸ் தினம். ஆகையால் கிறிஸ்தவர்கள் மிகவும் நன்றாக அப்பண்டிகையைக் கொண்டாடினர். பேட்ஸே தந்தையை இழந்திருந்த ஒரு கிறிஸ்துவப் பெண். அவளுக்கு வயது பத்து. அவள் மிகவும் ஏழை. மேலும் அவள் தாய் முடக்கு வாதத்தினால் வருந்திக் கொண்டிருந்தாள். ஆதலின் அவள் தன் தாயாருக்கும் தனக்கும் உணவிற்காகத் தினந்தோறும் பிச்சை எடுத்துக்கொண்டு வருவாள். அன்று கிறிஸ்துமஸாக இருந்தாலும் அவளுக்குத் தினம் கிடைக்கும் உணவு கூடக் கிடைக்கவில்லை. அவள் தன் கிராமத்தைச் சுற்றி வந்ததுதான் மிச்சம்.

இவ்வாறாக, பொழுது சாய்ந்து மாலை வந்தது. அப்பொழுது மாதா கோவிலுக்குச் சென்றால் ஏதாவது கிடைக்கும் என்ற ஆசை அவள் மனதில் எழுந்தது. ஆகையால் அவள் மாதா கோவிலுக்குச் சென்று கதவோரத்தில் நின்று கொண்டிருந்தாள். அச்சமயம் முதல் முறையாக மணி அடித்தது. அப்பொழுது சில தொழிலாளர்களான ஆண்களும், பெண்களும் வந்து தங்கள் இடத்தில் அமர்ந்தனர். அவர்களை அவள் பிச்சை கேட்டாள். ஆனால் ஒருவராவது அவளை லக்ஷியம் செய்யவில்லை.

இரண்டாம் முறையாக மணி அடித்தது. அப்பொழுது முதலில் வந்தவர்களை விடச்சற்று உயர்நிலையிலுள்ள மனிதர்கள் வந்தனர். அவர்களையும் அவள் யாசகம் கேட்டாள். ஆனால் அவர்களுள் சிலர் அவளது நிலைமைக்குப் பரிதாபப்பட்டனர். ஒரு சிலர் அவளைப் பார்த்து 'நீ ஏதாவது வேலை செய்து பிழைப்பதுதானே' என்று கூறினர். ஆனால் அவள் இவற்றையெல்லாம் கேட்டும் தன்னம்பிக்கையை இழக்கவில்லை.

மூன்றாம் முறையாக மணி அடித்தது. அப்பொழுது அரசர்களையும் முதலாளிகளையும் போன்ற பெரிய பணக்காரர்கள் வந்தனர். அவர்களையும் அவள் யாசகங்கேட்டாள். ஒரு சிலர் சில செப்புக் காசுகளைக் கொடுத்து விட்டுச் சென்றனர். அப்பொழுது ஒரு கிழவர் மாத்திரம் அவளைப்பற்றிய வரலாறுகளை விசாரித்தார். உடனே அவர் பிரார்த்தனைக்குக் கூடச் செல்லாமல் அவளுடைய வீட்டிற்குச் சென்றார்.

பேட்ஸே அவரைத் தன் அன்னையிடம் அழைத்துச் சென்றாள். பிறகு அந்தக் கிழவர் அவள் தாய்க்கு வேண்டிய மருந்துகளை வாங்கிக் கொடுத்து சில ரூபாய்களையும் கொடுத்து அவை செலவாகிவிட்டால் தன்னை வந்து கேட்குமாறு சொல்லி தன் விலாசத்தையும் கொடுத்துவிட்டு மாதா கோவிலுக்குச் சென்றார்.

அவர் அங்குச் செல்வதற்குள் பிரார்த்தனை முடிந்துவிட்டது. ஆகையால் அவரை அக்கோவில் பாதிரி அழைத்து அவர் பிரார்த்தனைக்கு வாராததால் அதற்குரிய தண்டனை மறுநாள் கொடுக்கப்படும் என்று சொல்லி அனுப்பினார்.

அன்று இரவு பாதிரியின் கனவில் கிறிஸ்து தோன்றி அக்கிழவர் தன்னுடைய உண்மையான பக்தன் என்றும், அவருக்கு எவ்விதமான தீமையும் செய்யலாகாதென்றும் சொல்லிவிட்டு மறைந்தார்.

மறுநாள் காலை அந்தக் கிழவரைப் பாதிரி அழைத்து அவரிடம் முந்திய நாள் தான் நடந்த விதத்திற்கு மன்னிப்புக் கேட்டார். அவரும் அப்பாதிரியை மன்னித்துவிட்டார். "எவர் ஒருவர் ஏழையிடம் அன்பாக இருக்கிறாரோ அவரிடம் கடவுளை நாம காணலாம்" என்ற நீதியை இந்தச் சிறிய வரலாற்றினால் அறிகிறோமல்லவா?.

சிறு துணுக்கு :—

பாங்கி மானேஜர் :— ஏன் ஸார்? உங்கள் பணத்தை மனைவியின் பெயரில் போடணும் என்கிறீர்களே! உங்கள் மனைவியின் பெயர் என்ன?

பணம் போட வந்தவர் :— அவள் பெயரே எனக்குத் தெரியாது. அவளைப பத்து வருஷமாய் 'அடியே'ன்னுதான் கூப்பிடுகிறேன்.

S. V. Hemavathi,
VI-A.

ஸ்ரீ ஜயந்தி

பகவானது கிருஷ்ணாவதாரம் துவாபரயுகத்திலே ச்ராவண மாஸ அஷ்டமி திதியிலேயாம். ஆதலின், அஷ்டமியிலே ஜனனமானதால் ஜன்மாஷ்டமி என்றும், கிருஷ்ணன் பிறந்த அஷ்டமியாதலால் கிருஷ்ணாஷ்டமி யென்றும் கோகுலத்திலே பிறந்ததினால் கோகுலாஷ்டமி யென்றும் பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. அவர் அவதரித்த ரோகிணி நக்ஷத்திரத்தைப் பிரதானமாகக் கொண்டு ஸ்ரீ ஜயந்தி என்று கூறுவார்கள்.

பூமண்டலத்தவர் அனைவரும் போற்றும் பகவத்கீதையின் பிதா பிறந்த தினம். அதர்மத்தை அறவே அகற்றித் தர்மத்தை நிலைநாட்டிய புண்ணிய புருஷன் அவதரித்த தினம். பாரதப் போரை நடத்தி, பூபாரத்தை அகற்றிய புண்ணியன் தோன்றிய தினம். பாரிலே பக்தியைப் பரப்பிய பரமாத்மா தோன்றியதினம். பல்லாயிரம் ஏகாதசியின் பலனை ஒரே நாளில் கொடுக்கவல்ல பரம பவித்ரமான தினம்.

பகவான் எதற்காகப் பூவுலகில் அவதரித்தார் என்றால், அரக்கர்களுடைய கொடுமையைத் தாங்கமுடியாமல் தேவர்கள் எல்லாரும் பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரந்தாமனிடத்தில் முறையிட்டுக் கொண்டார்கள். மகாவிஷ்ணு அவர்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி, தான் வஸுதேவ தேவகி இவர்களுக்குப் புத்திரனாகப் பிறந்து அரக்கர்களை அழிப்பதாகக்கூறி அதன்படியே தேவகியினுடைய கர்ப்பத்தில் தங்கினார். மாதங்கள் ஓடின.

காலமானது சகலகுணங்களும் பொருந்தி அதிசோபனமாக விளங்கியது. விஷ்ணுகுமாரனை பிர்மாவின் ஜன்ம நக்ஷத்திரமாகிய ரோகிணி உதயமாயிற்று. அப்பொழுது அசுவினி முதலிய நக்ஷத்திரங்களும், இன்னும் மற்ற தாரகைகளும், சூரியன் முதலான கிரகங்களும் சாந்தமாயிருந்தன.

திக்குக்கள் நன்றாகச்சோபித்தன. ஆகாயம் களங்கமற்று நக்ஷத்திரங்களுடன் கூடி விளங்கியது. பூமியானது அதிமங்களகரமான பட்டணங்கள், கிராமங்கள் கோகுலங்களோடு கூடியதாயிற்று.

நதிகளெல்லாம் தெளிவான ஜலமுடையவாயின. தடாகங்கள் தாமரைப்பூக்களால் ஒளி அடைந்தன. சுவர்க்கத்தில் தேவர்கள் துந்துபி வாத்தியம் முழக்கினார்கள். கின்னரர், கந்தர்வர், சித்தர் சாரணர் முதலியோர் பாடினார்கள். முனிவர்களும் தேவர்களும் சந்தோஷங்கொண்டு புஷ்பமாரி பொழிந்தார்கள். அர்த்த ராத்திரியில் ஜனார்த்தனர் அவதரிக்கும் பொழுது மேகங்கள் சமுத்திரத்திற்கருகில் மெதுவாகச் சப்தித்தன.

கிழக்குத்திக்கில் பூர்ண சந்திரன் உதித்தது போல் தேவகியினிடத்தில் எங்கும் நிறைந்துள்ள விஷ்ணுவானவர் ஆவிர்ப்பவித்தார்.

I तमद्भुतं बालकमम्बुजेक्षणं

चतुर्भुजं शङ्खगदार्युदायुधम् ।

श्रीवत्सलक्ष्मं गलशोभिकौस्तुभं पीताम्बरं

सान्द्रपयोद सौभगम् ॥

II महार्हवैदूर्यकिरीटकुण्डलत्विषा

परिष्वक्त सहस्रकुन्तलम् ।

उद्दामकाञ्च्यङ्गद कङ्कणादिभिः

विरोचमानं वसुदेव ऐक्षत ॥

தாமரைக்கண்ணனாயும், நான்கு புஜங்களையுடையவராயும், சங்கு சக்ரம் கதை முதலிய ஆயுதங்களைத் தரித்தவராயும், ஸ்ரீ வத்ஸம் என்னும் மறுவுடையவராயும், கண்டத்தினால் அழகுபெற்று விளங்கும் கௌஸ்துபம் என்னும் மணியைப் பூண்டவராயும், பீதாம்பர தாரியாயும், நீருண்டமேகம் போன்ற அழகுடையவராயும், காதிலணிந்திருக்கும் வஜ்ர வைடூரியங்களாற் செய்யப்பட்ட குண்டலத்தின் பிரகாசமும், வஜ்ர வைடூரியங்களாற் செய்யப்பட்ட கிரீடத்தின் பிரகாசமும பொருந்தி ஒளிவீசும் கூந்தலையுடையவராயும், கடகம், கேயூரம் அரைநாண்மாலை முதலிய ஆபரணங்களோடு விளங்குகின்றவராயும் அற்புதமாகக் காட்சியளித்த அந்த இளங்குழந்தையை வசுதேவர் பார்த்தார்.

பகவான் வஸுதேவ தேவகியிடம் சிறையில் சிறு குழந்தையாகத் தோன்றினர். அச்சமயத்திற்கேற்றதும், உடலுக்கு நோயை விளைவிக்காததும், புஷ்டிகரமானதுமான சீடை முதலிய பக்ஷணங்களை அளிக்க தேவகி கருதினுள்.

கிருஷ்ணன் அவதரித்த தினத்தில் உபவாஸமிருந்து இரவில் ஸ்நானம்செய்து கிருஷ்ணனைப் பூஜைசெய்ய வேண்டும். அவதாரக்கட்டத்தைப் பாராயணம் செய்யவேண்டும். அவர் கதை கேட்டுக் கண்விழிப்பது நல்லது. எப்பொழுதும் அவருடைய திருவடியை நினைக்க வேண்டும். இம்மை மறுமை இன்பமளிப்பவன் கண்ணன்.

S. B. Saranathan

விகடத் துணுக்குகள்

1. ஆசிரியர் :—டேய் கிருஷ்ணு, கூட்டலுக்கும், பெருக்கலுக்கும் என்னடா வித்தியாசம்?

கிருஷ்ணன் :—கூட்டினுலும் ஒரே குப்பைதான் வரும். பெருக்கினுலும் ஒரே குப்பைதான் வரும்.

2. சரித்திர ஆசிரியர் :—டேய் ராமு தாஜ் மஹாலைக் கட்டியவர் யார்?

கிட்டு :—கொல்லத்துக்காரர்கள் ஸார்.

R. S. Vedavalli
VI Form A. S.

1. பையன் :—பாட்டி நான் உங்களுக்காக அரசமரம் சுத்தினேனே, எனக்கு ஒருரூபாய் கொடு.

பாட்டி :—என்டா பையா, ஒரு ரூபாய் கேக்கறே, அரை ரூபாய்தான் தருவேன்.

பையன் :—அப்படின்னு 50 சுத்தை திருப்பி அப்பிரதக்ஷிணமாய் சுத்திடுவேன்.

வித்தியாசம்

2. படிக்காத பிரபு படித்த ஏழை தன் பக்கத்தில் அமர்ந்ததும்பிரபு கோபத்துடன் :—உனக்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம் என்முர்.

படித்தவர் :—தங்கள் இருவருக்கும் இடையில் உள்ள தூரத்தை அளந்துவிட்டு :—எனக்கும் மிருகத்திற்கும் ஒரு அடி தூரம் வித்தியாசம் என்முர்.

N. Yogam
IV Form B. S.

சுய சரிதை

நான் மின்சார விசிறியின் அடியில் மிகச்சௌக்கியமாய் இருந்தேன். அப்போது என்னைப்போல் பாக்கியசாலி யாருமே இருக்க மாட்டார்கள் என்று எண்ணி இறுமாந்திருந்தேன். திடீரென்று என்னை என் எஜமானர் எடுத்து வேறு ஒருவர் கையில் கொடுத்தார். என்னை வாங்கியவர் முக்காலணாவை எடுத்து என் எஜமானர் கையில் கொடுத்துவிட்டு என்னைத் தன்பையில் போட்டு கொண்டார். ஹூம், என்னுடைய மதிப்பு ¾ (முக்கால்) அணா தானா என்றுநான் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர் என்னைத் தூக்கிக் கொண்டு தெருவில் நடந்தார். நான் அவருடைய ஜேபியிலிருந்து தெருவை எட்டிப் பார்த்து கொண்டே சென்றேன் திடீரென்று அவர் ஒரு கதவைப்படார் படார் என்று தட்டினார். உடனே உள்ளிருந்து ஒரு குரல் வந்துவிட்டேன் என்று கேட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் கதவு திறக்கப்பட்டது. மனிதர் களைப்புடன் இருந்ததால் என்னை அலட்சியமாகத் தூக்கி மேஜையின் மேல் போட்டார் அய்யய்யோ அப்போது நான் பட்ட கஷ்டத்தைச் சொல்லவே முடியாது. பின்பு சிறிது நேரத்திற்கெல்லாம் அம்மனிதர் என்னை ஒரு கையால் அழுத்தியவாறு மற்றொரு கையால் என்னைக் குதிக் குத்தி எழுதினார். (அதாவது பேனாவினால் கார்டில் எழுதினார்.) அப்போது நான்பட்ட கஷ்டத்தை நினைத்தாலே பயமாக இருக்கிறது. என்னைத் திரும்பிப் பார்த்தார் (படித்தார்) எனக்குப் பெரிய ஹிம்சையாக இருந்தது.

பின்பு சிறிது நேரத்திற்கெல்லாம் அம்மனிதர் என்னைத் தூக்கிக்கொண்டு நடந்தார். எனக்கு ஓரே பயமாக இருந்தது. பின்பு ஆகாயத்திலிருந்து கீழேதள்ளுவதுபோல் ஒரு இருட்டான அறையில் தள்ளினார் (போஸ்ட் பெட்டி) நான் பலர் மேல் விழுந்தேன். அவர்கள் என்னைப் பார்த்தும்தம்பி! என்னப்பா கொஞ்சம் பார்த்து வரக்கூடாதா. சுத்த பட்டிக்காட்டான்போல் இருக்கிறாயே என்றார்கள் ஐயோ என்னை அந்த வார்த்தைகள் எப்படி பாதித்தன தெரியுமா? மற்றொருவர் என்னைத் தள்ளினார். அதற்கு நான் என் சொல்வேன். நான் அழுதவாறே சிறிது நேரத்திற்கெல்லாம் தூங்கிவிட்டேன். மற்றவர்கள் ஏதோ சளசளவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கதவு திறக்கும் சப்தம் கேட்டது. என்மேல் வெளிச்சம் பட்டது. உடனே ஒருவன் என்னைக் கெட்டியாகப் பிடித்து ஒரு பையில் போட்டுக்கொண்டான். உடனே நான் சிறிது சந்தோஷம் அடையும் சமயத்தில் பையைக் கெட்டியாகக் கட்டினான். மற்றவர்கள் என்னுடன் ஒன்றும் பேசவில்லை. அவர்களில் சிலர் என் இனம். சிலர் வேறு இனம். நான் போஸ்ட்மேனின் தோள் மேல் மற்றவர்களுடன் பிரயாணமானேன். பின்பு நான் முன்பு இருந்த இடத்திற்கே வந்தேன் (தபால் நிலையம்) அங்கு என்னை யாரும் கண்டுகொள்ளவில்லை. அதற்குக் காரணம் என் மேல் ஒரே மையாக இருந்தது சிறிது நேரத்தில் என்னுடன் இருந்த ஒவ்வொருவரையும் ஒரு முரடன் ஒரு அச்சினால் குத்தினான். நான் பயப்பட்டுக்கொண்டு இருக்கும் சமயத்தில் என்னையும் அம்முரடன் குத்தினான். சிறிது நேரத்திற்கெல்லாம் பையில் அடைக்கப் பட்டேன்.

பின்பு லாரியில் பிரயாணமானேன். அங்கிருந்து இறக்கப்பட்டு ரயில் வண்டியினுள் ஏற்றப்பட்டேன். அங்கு ஒருவர் என்னுடன் இருந்த ஒவ்வொருவரையும் பிரித்துப் பிரித்து வைத்தனர். என்னுடன் சிலர்தான் வநதனர். சிலரை நடுநடுவே இறக்கினார். ரயில் கூவென்று அலறியவாறே ஓடிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் ரயில் ஓர் இடத்தில் நின்றது. பின்பு என்னையும், என்பக்கத்தில் இருந்தவர்களையும் ஒருவர் கையில் கொடுத்தார். அவன் என்னைத் தபால் நிலையத்திற்கு எடுத்துச்சென்றான். அங்குத் திரும்பியும் என்னைத் தூக்கிக் கொண்டு தெருத் தெருவாய் அலைந்தான். கடைசியாக ராமகிருஷ்ணன் என்று கூப்பிட்டவாறே என்னை ஒரு வீட்டுத் திண்ணைமேல் வீசியெறிந்துவிட்டுச் சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் என்னை ஒருவர் எடுத்துத் திருமபித் திரும்பிப் படித்தார். பின் ஒரு குழந்தை அவர் காலை கட்டிக்கொண்டு அழுதது. அம்மனிதர் எதற்கு அழுகிறாய் என்று கேட்டார். அக்குழந்தை என்னைச் சுட்டிக்காட்டி அழுதது உடனே படித்த என்னை அக்குழந்தை கையில் கொடுத்தார். அக்குழந்தை என்னை வைத்துக் கொண்டு விளையாடியது. அதற்கு விளையாட்டாகத் தோன்றிற்று. ஆனால் எனக்கு அது நரக

வேதனையாக இருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அக்குழந்தை அழுதவாறே என்னை சுக்குச் சுக்காக கிழித்துப்போட்டது. காரணம் அதற்குப் பசி. சிறிது நேரத்திற்கெல்லாம் என்னை ஒருத்தி துடைப்பத்தால் இப்படியும் அப்படியுமாகத் தள்ளிக் கடைசியாக என்னை ஒன்ருகச் சேர்த்துவாரி குப்பைத்தொட்டியில் போட்டாள். அப்பப்பா! ஈவு இரக்கம் இல்லாதவர்கள்; கல் நெஞ்சம் உடையவர்கள். என்னை எப்படி எப்படியெல்லாம் பாடுபடுத்தினார்கள். தெரியுமா? நினைத்தாலே நடுங்குகிறது.

A. C. Kousalya
IV Form A

பொது இடங்களில் நடந்துகொள்ளும் விதம்

பலர் கூடும் இடங்களாகிய கலாசாலைகள், கல்லூரிகள், நூல் நிலையங்கள், வாசகசாலைகள், ரயில்வே ஸ்டேஷன்கள் முதலியனவே பொது இடங்களாகும். அவ்விடங்களில் நடந்து கொள்வதிலிருந்துதான் பிறநாட்டாரும் நம் நாகரிகத்தை நன்கறிந்து கொள்கிருர்கள்.

இந்தியராகிய நாம் இன்னும் முற்றும் நாகரிகம் பெற்றவர் அல்லர் என்று பிறநாட்டார் கூறுகின்றனர். இதற்குக் காரணம் பொதுவிடங்களில் நம்மவர் சிலர் தவருக நடந்துகொண்டதை அவர் கண்டதேயாகும் என்று நினைக்கவேண்டி இருக்கிறது. (இதற்கு உதாரணம்) ஐரோப்பியர் ஒருவர் ஒரு நூலில் எழுதி இருக்கிருர். அது என்னவென்ருல் எக்காரியத்தையும் சப்தமின்றிச்செய்யப் கருப்பருக்குத் தெரியாது." என்று எழுதியுள்ளார்.

ஆகையால் நாமேயன்றி நம் நாடும் பிறரால் மதிக்கப்பட வேண்டுமானுல் பலரும் பார்க்கக் கூடிய பொது விடங்களில் நாம் தகுந்தபடி நடப்பதேயாகும். பிறருக்குத் துன்பம் ஏற்படும்படியான காரியங்களைப பொதுவிடங்களில் செய்யலாகாது.

அவை என்னவென்ருல் பொதுவாக மக்கள் நடமாடும் இடங்களில் எச்சில் உமிழ்தல், மூக்கு சிந்துதல், காகிதங்கள், பழத்தோல, குப்பை, முதலியவற்றைப் போடக் கூடாது; அத்துடன் செய்பவரையும் செய்யாமலிருக்கச் சொல்ல வேண்டும். மேலும் பழத்தோல் முதலியன வழியில் கிடந்தால் நாம் கால் வழுக்கி விழுந்து ஆபத்துக்குள்ளாவோம். இன்னும கண்ணுடித் துண்டுகள், துருப்பிடித்த ஆணிகள், தகரம் முதலியவற்றை நாம் அவ்விடங்களில் போடக் கூடாது. முன் யோசனை இல்லாமல் யாராவது எறியப்பட்டிருப்பதை நாம் கண்டால் அவற்றைப் பொறுக்கி எடுத்துத் தகுந்த இடங்களில் போட்டுவிட வேண்டும்.

தெருக்களில் எவ்விடத்திலும் நாம் அசுத்தம் செய்யலாகாது. நம் வீட்டிலுள்ள சிறுவர் முதலானவர் அசுத்தம் செய்தாலும் செய்யக் கூடாது என்று சொல்ல வேண்டும். நம் வீட்டுக் குப்பைகளை, பெண்களையும், வேலைக்காரர்களையும் கொண்டு அவற்றிற்குரிய தொட்டியில் கொட்டும்படி வற்புறுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அவை காற்றில் பறந்து பல இடங்களுக்குச் சென்றும், வீட்டுக்குள்ளும் புகும்.

சுவர்களிலும், தூண்களிலும் எச்சில் துப்புவதும் அவற்றில அழுக்கான கைகளைத் துடைத்தலும், பெரும் பிழையாகும். அவைகளின் மேல் கைகளை வைப்பதும், சாய்வதும், தவருகும். பெஞ்சு, மேஜை முதலான சாமான்கள் மேல் எழுதலும், கத்தியால் அவற்றைசசிதைத்தலும், பேனுவிலுள்ள மையை உதறுதலும், அழுக்கான கால்களை வைப்பதும் ஆகா.

பொது விடங்களில் உள்ள செடிகளின் கிளைகளையாவது, பூக்களையாவது தொடுவது தவறு. காற்ருடி விடுதல், கற்கள் எறிதல், முதலான ஆபத்துதரும் விளையாட்டுகளை விளையாடக்கூடாது. என்று பிள்ளைகளுக்குச் சொல்ல வேண்டும்.

பெண்கள் வெளிப்படச்சிரிப்பதும், பேசுவதும், பலருக்கு வெறுப்பை உண்டாக்கும். பொதுவிடங்களில் ஒருவரையும் நாம் தள்ளிக் கொண்டுச் செல்லக்கூடாது. எவராய் இருந்தாலும் முக்கியமாக இளையோர், முதியோர் பெண்கள், நோயாளிகள் முதலியோருக்கு இடம் தரவேண்டும்.

இன்னும் இவை போன்ற நல்லொழுக்கங்களைப் பொது இடங்களில் கைக்கொள்ளுதல்

அவசியம். அப்போதுதான் நம்முடைய பெருமையும், நம் பெற்றோர்களின் பெருமையும் உபாத்தியாயர்களிடம் காட்டும் மரியாதையும், நம் நாட்டுப் பெருமையும் நம் வசத்தில் இருக்கிறது என்பதை மறவாமல் என்றும் பொது விடங்களில் பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டும்.

N. கங்காபாய்,
IV Form E.

நான் கண்ட நல்லிடம்

(தீருக்கழுக்குன்றம்)

நாங்கள் எங்கள் வகுப்பு ஆசிரியருடன் ஒருநாள் திருக்கழுக்குன்றம் செல்ல முடிவு செய்தோம். நாங்கள் பள்ளியைவிட்டு நேராக எழும்பூர் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம்.

அங்கு எங்களுக்கென்று தனிவண்டி ஒதுக்கப்பட்டிருந்தது நாங்கள் அதில் ஏறி அமர்ந்தோம். புகைவண்டியில் நாங்கள் ஏறி அமர்ந்த சிறிது நேரத்திற்கு வண்டி புறப்பட்டது. நாங்கள் வழியில் பல நற்காட்சிகளைப் பார்த்துக்கொண்டே செங்கற்பட்டு நிலையத்தை அடைந்தோம். நாங்கள் வண்டியைவிட்டிறங்கி, அங்குள்ள அழகிய மலையைச் காணச்சென்றோம். அம்மலைமீது வானொலியும், மலர்ச் செடிகள் பலவும் வைக்கப்பட்டிருந்தன. மலைமீதிருந்து பார்ப்பின் செங்கற்பட்டும் அதனை அடுத்துள்ள கிராமங்களும் நன்கு தெரியும் எங்கும் மின் விளக்குகள் போடப்பட்டிருந்தன. நாங்கள் அவ்வழகிய மலைக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தோம். நான் அம்மலையின் சிறப்பைக் குறித்துக்கொண்டேன். பின்னர் நாங்கள் பஸ் நிலையம் சென்றோம். அங்குஎங்களுக்காக ஒரு தனி பஸ் காத்திருந்தது.

நாங்கள் அதில் ஏறிக்கொண்டோம். திருக்கழுக்குன்றம் செங்கற்பட்டிலிருந்து ஒன்பது கல் தொலைவில் உள்ளது. ஒருமணி நேரத்திற்குள் பஸ் திருக்கழுக்குன்றத்தை அடைந்தது. நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினோம். நாங்கள் ஒரு சத்திரத்தில் தங்கினோம். அக்கிராம மக்கள் சிலர் எங்களைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள், சங்குத் தீர்த்தம் நோய்களைப் போக்கும் சக்தி உடையது; அதனால் இதில் நீராடுதல் நல்லது என உரைத்தனர். நாங்கள் அத்திருக்குளத்தில் நீராடினோம். மீண்டும் சத்திரத்திற்கு வந்து சிற்றுண்டி உட்கொண்டு மலை ஏறப் புறப்பட்டோம். ஆ! என்ன உயரமான மலை. அந்தமலை ஏறுவது எங்களுக்குக் கடினமாக இருந்தது. நாங்கள் ஒவ்வொரு இடத்திலும் அமர்ந்து, அமர்ந்து மலை உச்சியை அடைந்தோம். ஆசிரியர் எங்களுக்கு மலையைச் சுற்றியுள்ள அழகிய இயற்கைக் காட்சிகளைக் காட்டினார். நாங்கள் கண்டு மகிழ்ந்தோம். ஆசிரியர் அவ்வழகிய காட்சியைப் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

மலையுச்சியில் சிவபெருமான் கோவில் இருக்கிறது. அக் கடவுளுக்குப் படைத்த உணவின் ஒருபகுதி அந்த அவ்வேளையில் நாளும் தவறாது வரும் இரண்டு கழுகுகளுக்குத் தரப்பட்டது. அவைதின்று சென்றவுடன் எஞ்சியது எங்களுக்குத் தரப்பட்டது. அந்தக்கழுகுகள் வந்து செல்வதே அத்தலத்தின் சிறப்பாகும். அக்கழுகுகள் வரும் காட்சியும், வந்து உணவுகொள்ளும் காட்சியும் கண்டு மகிழத்தக்கவை. அதனையும் ஆசிரியர் புகைப்படம் எடுத்துக்கொண்டார். கழுகுகள் வந்து போகும் காரணத்தினாலேயே அம்மலை திருக்கழுக்குன்றம் எனப் பெயர் பெற்றது. என்று ஆசிரியர் கூறினார். இந்த மலையில் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகள் பல உள்ளனவாம். ஆதலால் இம்மலைக் காற்று உடம்புக்கு நல்லது என்று ஆசிரியர் கூறினார். பிறகு நாங்கள் அம்மலையைச் சுற்றிவந்தோம். ஊரில் முருகக் கடவுள் கோவில் ஒன்று உள்ளது. நாங்கள் அங்கும் சென்று மீண்டோம். மறுநாட்காலை ஆறு மணிக்கு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டோம். ஒன்பது மணிக்கு எழும்பூர் வந்து சேர்ந்தோம். நாங்கள் வரும்பொழுது திருக்கழுக்குன்றத்தின் சிறப்புகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்தோம். பள்ளியில் இறைவணக்கம் செலுத்திவிட்டு நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் இல்லம் சென்றோம். இம்மாதிரி இன்பச் செலவுகள் பல செய்தால் தான் அறிவு வளர்ச்சி அடையும் என்பது எனது நம்பிக்கை.

S. Alamelu,
III Form B.

வெற்றியின் தோல்வி

சிறுகதை

வசந்த காலத்தின் பூரண பொலிவில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன விருக்ஷங்களும், செடி கொடிகளும். அவற்றின் அசைவினால் ரம்மியமாக வீசிக்கொண்டிருந்த தென்றற்காற்று புஷ்பங்களின் சுகந்தத்தைச் சுமந்து வந்து அள்ளி வீசிக்கொண்டிருந்தது. ரம்மியமான மாலை நேரம். அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பளிங்கு மேடையில் அமர்ந்து கொண்டிருந்தார் அசோகசக்கரவர்த்தி. அவருக்கு முன்னால் இருநாட்டியப் பெண்கள் நவரஸ பாவங்களை முகத்தில் கொண்டுவந்து, உடலை வளைத்து நெளித்து நடனமாடிக் கொண்டிருந்தனர். தம்மை மறந்து அதை ரஸித்துக் கொண்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி திளைத்துக் கொண்டிருந்தார் மன்னர்.

திடீரென்று நாட்டியம் நின்றது. வெகுநேரமாக ஆடினதால் ஏற்பட்ட களைப்பும், சோர்வும் நாட்டியப் பெண்களின் முகங்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. உடலெல்லாம் வியர்வை மயம்; கலைந்த கூந்தல்; பாதி அழிந்த பொட்டு.

"உம்!...நடக்கட்டும்!..." என்ற அதிகாரக் குரல் எழுந்தது மன்னரிடமிருந்து.

ஒரு நீண்ட பெரு மூச்சு எறிந்துவிட்டு மீண்டும் நடனமாட ஆரம்பிதனர் நாட்டியப் பெணகள் இருவரும.

வேர்க்க விறு விறுக்க ஓடி வந்தான் ஒரு சேவகன்; "அரசே!...உபகுப்தர் வந்திருக்கிறார் .." என்று பணிவுடன் தெரிவித்து விட்டு, கைகட்டி வாய் பொத்தி அவருடைய கட்டளைக்குக் காத்திருந்தான் அவன்.

"அவரை இங்கே வரச்சொல்..." என்று சொல்லி விட்டு நாட்டியத்தில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தார் அவர்.

மலர்ந்த முகத்துடன் அரசருக்கருகில் போடப் பட்டிருந்த ஆசனத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார் உபகுப்தர்.

சிறிது நேரத்தில் நாட்டியம் நின்றது. நாட்டியப் பெண்கள் இருவரும் விடை பெற்றுக்கொண்டு சென்று விட்டனர். பின்பு தமக்கருகிலிருந்த தங்கப் பாத்திரத்திலிருந்து இரு தங்கக் கிண்ணங்களில் சோம பானத்தை ஊற்றி ஒன்றைத் தாம் எடுத்துக் கொண்டு மற்றொன்றை உபகுப்தரிடம் நீட்டினார் அசோக மன்னர்.

"...தங்களைப் போன்ற அரச வம்சத்தினருக்குச் சோமபானம் பருகுவது தகுதி, என் போன்ற காவியுடை தரித்த சந்யாசிகளுக்குத் தேவையில்லை ..." என்று புன்னகையுடன் கூறி அதை ஏற்க மறுத்து விட்டார் உபகுப்தர்.

அவருடைய விரக்தி மனப்பான்மையைப்பற்றிக் கேலி செய்து உலகத்திலுள்ள சுகபோகங்களை எடுத்துக்கூறினார் அசோகர்.

உலக வாழ்வு துன்பமயமானது, குழப்பம் மிகுந்தது என்பதை நன்கு அறிந்து இளமையிலேயே காவியுடைகள் அணிந்து சந்யாசம் பூண்டவர் உபகுப்தர். மனதை விடப் பெரிய, உயர்ந்த விசாலமான ராஜ்யம் எதுவும் இல்லை. அவர் அத்தகைய மனதையும் வென்றுகண்டவர். அவர் முகத்தில சதா அமைதியுடன் கூடிய புன்னகை அரும்பி நிற்கும். அசோகருடைய வார்த்தைகளை அவர் கேட்டபோது அவருடைய திருமுகத்தில் இளநகை அரும்பியது. நீர்க் குமிழியின் நிலையை யொத்த இவ்வுலக வாழ்க்கையின் நிரந்தரமற்ற இன்பங்களில மனதைப் பறி கொடுத்து உழலும் அசோக மன்னரின் குறுகிய மனப்பான்மையை எண்ணித் தமக்குள் சிரித்துக் கொண்டார் உபகுப்தர்.

கதிரவன் மலைவாயில் மறைய ஆரம்பித்தான். எங்கும் இருள் படர ஆரம்பித்தது. உபகுப்தருடன் அரண்மனைக்குச் செல்ல எழுந்தார் அசோகர்.

2

அன்று மிகவும் ரௌத்ராகாரமாக சிம்மாசனத்தில் வீற்றிருந்தார் அசோக சக்கரவர்த்தி. சபையில் அமைதி நிலவியிருந்தது. எல்லோரும் பயபக்தியுடன் நின்றுகொண்டிருந்தனர். அதிகாரக் குரலில் தம் மந்திரியை அழைத்தார் மன்னர்.

"இன்னும் ஒரு மண்டலத்திற்குள் அந்தக்கலிங்க அரசன் நமக்கு அடிபணிய ஒப்புக்கொள்ளவேண்டும் இல்லையேல் நாம், எந்தக் கணமும் அவன் ராஜ்யத்தின் மேல் படையெடுக்கக்கூடும் என்று கண்டிப்பாக அந்த லிகிதத்தில் குறிப்பிடு" என்று கூறினார் அவர்.

"உத்தரவு பிரபோ!..." என்று சொல்லி மன்னரின் கட்டளையைச் சிரமேற்தாங்கி அதை நிறைவேற்ற சென்றான் மந்திரி. அவை கலைந்தது."

அரசர் குறிப்பிட்ட தவணை கழிந்து விட்டது, கலிங்க தேசாதிபதி அசோகமன்னருக்கு அடிபணிய மறுத்து விட்டான் என்பதை அறிந்த அவருக்கு சினம் பொங்கியது. கலிங்க மன்னரின் இறுமாப்

பையும், தைரியத்தையும் கண்ட அவர் உள்ளத்தில் அணைபோடமுடியாத கோபவெள்ளம் கரைபுரண்டு ஓடியது. தம் சேனைத்தலைவனை அழைத்து உடனே போருக்குத் தயார் செய்யும்படி உத்தரவு விடுத்தார்.

அமைதி நிலவியிருந்த கலிங்கநாட்டின் அரசியல் வானில் ஒருகுமுறல்; நாட்டில் பரபரப்பு அசோக சக்ரவர்த்தியின் போர்ப்படைகள் கலிங்க நாட்டை நோக்கி வந்துகொண்டிருந்தன. செய்தி அறிந்த கலிங்க மன்னன் தன் படைகளைத் திரட்டினான்- அசோகமன்னரின் படைகளை எதிர்க்க.

பயங்கரமான போர் மூண்டது இருபெரும் சாம்ராஜ்யங்களுக்கு மிடையில். கடும்யுத்தத்திற்குப்பின் கலிங்க நாட்டின் கோட்டைகள் இடிந்து சரிந்தன. கலிங்க மன்னரின் படைகளைச் சின்னா பின்னப் படுத்தியது அசோகரின் திரண்ட சேனை. வெட்டுண்ட தலைகள் கீழே உருண்டன; முண்டங்களிலிருந்து 'குபு குபு' வென்று ரத்த ஆறு பெருகி ஓடலாயிற்று. எங்குப் பார்த்தாலும் பிணக்குவியல்கள், வானத்தே வட்டமிட்டன கழுகுகளும், பருந்துகளும். போர்க்களம் ரணகளமாயிற்று. "வெற்றி பெற்றோம்" என்று விண்ணில் ஜெயக்கொடி நாட்டி ஆர்ப்பரித்தனர் அசோகரின் வீரர்கள்.

தமக்கென நிர்மாணிக்கப்பட்டிருந்த தனிக்கூடாரத்தில் அமர்ந்திருந்தார் அசோக சக்ரவர்த்தி. கையில் விலங்கிட்ட கோலத்துடன் முன்னும் பின்னும் சேனாவீரர்கள் பிடித்துத் தள்ள இடையில் வந்து கொண்டிருந்தான் தோல்வியுற்ற கலிங்க தேசாதிபதி. அசோகரின் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான் அவன். 'தோல்வியுற்று விட்டோமே' என்று அவன் தலை கவிழவில்லை நிமிர்ந்த தலையுடனும், கம்பீரமான பார்வையுடனும் அரசரை நேருக்கு நேர் நோக்கினான் அவன்.

"எனக்கு அடிபணிந்து கப்பம் கட்டமாட்டேனென்று கூறியதனால் வந்த விளைவைப் பார்த்தாயா? என்னுடைய வீரமும் பராக்கிரமமும் இப்போதாவது உனக்குப் புரிந்ததா? ...இனியாவது உன் கர்வம் அடங்கியதா?..." என்று ஏளனமும், பெருமையும் ஒருங்கே தொனிக்கும் குரலில் கேட்டார் அசோகர்.

புன்னகை அரும்பியது கலிங்க தேசாதிபதியின் முகத்தில். "தாங்கள் என்னை என்னதான் சித்திரவதை செய்தாலும், இப்போது செய்திருப்பதைவிட கீழ்த்தரமான நிலைக்கு என்னைக் கொண்டுவந்தாலும் கூட நான் தங்களுக்கு அடிபணிந்து தலை வணங்கி என் தோல்வியை ஒப்புக்கொள்ளமாட்டேன் .."— தைரியமும் பராக்கிரமும் பார்வையில் மினிர, குரலில் தொனிக்க, முகத்தில் பிரதிபலிக்கக் கொஞ்சமாவது அச்சமோ ஏக்கமோ இன்றி வீரத்துடன் கூறினான் கலிங்க தேசாதிபதி. அதைக்கண்டு அசோக சக்ரவர்த்தியே அசந்துவிட்டார் ஒருகணம். இருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ள ஒப்பவில்லை அவருடைய வெற்றியினால் ஏற்பட்ட வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்த உள்ளம்.

"அரச சிம்மாசனத்தில் வீற்றிருந்து இவ்வளவு காலம் அரசுபுரிந்து வந்த நீ என்முன் உன் தோல்வியை ஒப்புக்கொள்ளாமல் இப்போது வீராப்பு பேசலாம். ஆனால் போகப் போக நீயே ஒப்புக் கொள்ளும்படி செய்கிறேன் பார்..." என்று கூறி விட்டு அவனை இழுத்துச் செல்லுமாறு உத்தர விட்டார் அசோகசக்ரவர்த்தி பெருமையும், மகிழ்ச்சியும் முகத்தில் தாண்டவமாட, கலிங்க மன்னன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

3

தாம் அடைந்திருக்கும் வெற்றியைப்பற்றி நினைத்து நினைத்துப் பார்த்து உள்ளம் பூரித்துக் கொண்டிருந்தார் அசோகர். 'இதுவரை நம் ஆட்சிக்குட்படாமலிருந்தது கலிங்கதேசம் ஒன்று தான். ஆனால் தற்போது அத்தேச மன்னனும் நமக்குச் சரணாகதியடைந்துவிட்டான். இதுவல்லவோ மகத்தான வெற்றி !...இனி நமக்கு ஈடு இணை யாருமில்லை...'—என்று எண்ணி எண்ணி அகமகிழ்ந்து கொண்டிருந்தார் அவர். "அரசே!..."—தம் இன்பக்கனவுலகத்திலிருந்து விடுபட்டு நிமிர்ந்து பார்த்தார் அசோகர்.

கருணை பார்வையிலே தீக்ஷண்யத்தின் சுடர் தெரிக்க முக மலர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தார் உபகுப்தர்.

"வாருங்கள்" என்று அவரை வரவேற்றார் மன்னர். "எத்தகைய மகத்தான வெற்றி பார்த்தீர்களா?......இதைப்போன்ற ஒரு வெற்றியை நான் இதுவரை அடைந்ததில்லை." —என்று உற்சாகத்துடன் கூறினார்.

"உண்மைதான். அத்தகைய ஒரு வெற்றியைத் தாங்கள் அடைந்த போர்க்களத்தை நான் ஒருமுறை சுற்றிப் பார்த்துவர விரும்புகிறேன். தங்களுக்கு வர சௌகரியப்படுமா என்று கேட்கதான்........ அவர் இன்னும் கூறி முடிக்கவில்லை. அதற்குள் 'சரி' யென்று எழுந்தார் மன்னர். "அதற்கென்ன!......தாராளமாக......" என்று சொல்லிப் பூரிக்கும் இதயத்துடன் உபகுப்தருடன் கிளம்பினார்.

உபகுப்தருடன் போர்க்களத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டே சென்றார் அசோகர். அவருடைய வெற்றிக்காகப் பாடுபட்டு வாளேந்தி போர் புரிந்து முடிவில் உயிர்துறந்து விழுந்துகிடக்கும் போர் வீரர்களின் பிணங்களையும், இன்னும் உயிர்

போகாமல் துடித்துக்கொண்டிருக்கும் ஆத்மாக்களையும் அவருக்குக் காட்டிக்கொண்டே சென்றார் உபகுப்தர். எங்குப் பார்த்தாலும் கைவேறு கால்வேறாக உடல் வேறு, தலை வேறாகக் கிடக்கும் வீரர்கள்.

சட்டென்று அசோகரின் காலில் ஏதோ ஒன்று இடறியது. ஒரு கணம் நின்றார் அவர். "...... என்ன!......என் நின்று விட்டீர்கள்?......வாருங்கள்,....." என்றார் உபகுப்தர்.

"......இல்லை......ஏதோ ஒரு வெட்டுண்ட தலை காலில் இடறியது......வேறொன்றுமில்லை......" என்று சொல்லிக்கொண்டே அவரைப் பின் தொடர்ந்தார் அவர்.

சற்று தூரத்தில் போர்க்களத்தின் ஒரு பகுதியில் கேட்டது அந்த ஓலக்குரல்.

"உபகுப்தரே!......அது என்ன?......" என்று திடுகிட்டு வினவினார், அசோகர். அவர் முகத்தில் முதலில் கிளம்பியபோது இருந்த தெம்பு அப்போது இல்லை என்பதைக் கவனித்துவிட்டார் உபகுப்தர்.

"வாருங்கள்!...போய்ப் பார்க்கலாம்......" என்று அவரை அழைத்துக்கொண்டு அக்குரல் வந்த திசையை நோக்கிச் சென்றார் அவர். சற்றுத் தூரத்தில் இருவரும் நின்றுகொண்டனர்.

ஒரு தாய் நரை, திரை தோன்றி சாவை எதிர் நோக்கி நிற்கும் கிழட்டு ஜன்மம். இறந்துபோன தன் ஒரே மகனின் வெட்டுண்ட தலையை வைத்துப் புலம்பிக்கொண்டிருந்தது அது. "ஐயோ!...... என் மகனே!......உன்னை நம்பித்தானேடா இக் கூட்டில் இவ்வளவு காலமும் உயிரை வைத்திருந்தேன் நான!...... என்னை நிராதரவாக விட்டு விட்டுப் போய் விட்டாயே!.... இனி இந்த ஜன்மம் எதற்கு? என்னை எடுத்துப் போட்டுவிட்டு நீ போயிருக்கக் கூடாதா?......உனக்கு என்ன வயசுடா ஆகிவிட்டது?......நான் இனி எப்படி உன்னைப் பிரிந்து வாழ்வேன்? என்று தலையிலடித்துக் கொண்டு புலம்பிக்கொண்டிருந்தாள் அவள்.

அசோகர் வெறித்த பார்வையுடன் அங்கேயே நின்றுகொண்டிருந்தார். அவருடைய வெளிறிய முகத்தைக் கண்டு தமக்குள் மெல்ல சிரித்துக் கொண்டார் உபகுப்தர்.

போர்க்களத்தின் மற்றொரு பகுதி. தன் கணவனின் உடலை வாரியணைத்துக்கொண்டு அவனுடைய வெட்டுண்ட கைகால்களைப் பார்த்து விம்மிக் கொண்டிருந்தாள் ஒரு இளம்பெண். அவள் பக்கத்தில் பச்சிளம் பாலகனொருவன் நின்று புலம்பிக் கொண்டிருந்தான்.

"ஐயோ......என் தெய்வமே!......போருக்குச் செல்ல வேண்டாமென்று நான் தடுத்தபோது கேட்டீர்களா?......வெற்றிமாலை சூடித் திரும்புவேன் என்று சொல்லிவிட்டுப் போனீர்களே!... இப்போது என்னையும், நம் இளம் பாலகனையும் தவிக்க விட்டு விட்டுப் போய்விட்டீர்களே!.....ஒரு அரசனுடைய வெற்றிக்காக உங்களுடைய ஒப்பற்ற உயிர் பலியாக வேண்டுமா? நமமுடைய துன்பத்தின் சமாதியிலா அந்த அரசருடைய இன்ப சாம்ராஜ்யம் தோன்றவேண்டும்?......இப்போது எந்த அரசருக்காக நீங்கள் உயிர் துறந்தீர்களோ அவர் இப்போது எங்களைக் காப்பாற்றப் போகிறாரா?......என்னே விதியின் கொடுமை!.....என்று அலறிக் கொண்டிருந்தாள்.

"அப்பா!......அப்பா!......"என்று தேற்றுவாரின்றி புரண்டு புரண்டு அழுது கொண்டிருந்தான் அப்பாலகன்.

அசோகரின் தலை அவரையும் அறியாமல் கவிழ்ந்தது. அவரது முகத்தில் ஒரு அசாதாரண வருத்தத்தில சாயை படர்ந்தது. அவரது மனத்தை ஏதோ ஒரு பாரம் அழுத்தியது. அதற்கு மேலும் அக்கோரக் காட்சிகளை காண விரும்பாத அவர் மௌனமாய் தம் கூடாரத்தை நோக்கி கிளம்பினார்.

"என்?......அதற்குள் திரும்பிவிட்டீர்களே!...... இன்னும போர்க்களம் முழுவதையும் பார்த்து முடியவில்லையே!....." என்றார் உபகுப்தர். அவருடைய மன மாற்றத்தை அறிந்தும் அறியாதவர்போல.

"பார்த்தது......போதும்......" என்று துயரத்தால் நடுங்கும் குரலில் கூறிக்கொண்டே தம் கூடாரத்திற்குச் சென்ற அவர் அங்கிருந்த ஆசனமொன்றில் மௌனமாய், கண்களை மூடிக்கொண்டு, தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். அவரை ஒரு கணம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு வெளியே சென்றுவிட்டார் உபகுப்தர்.

4

மறுநாள். ஜயபேரிகை முழங்க வெற்றிபெற்ற சேனைகளுடன் அரண்மனைக்குத் திரும்பப்போகும் மன்னரை வரவேற்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தாள் அரசி. அரண்மனையில் எங்குப் பார்த்தாலும் தோரணங்கள் நாட்டப்பட்டு பறந்துகொண்டிருந்தன. சந்தோஷ சாகரத்தில் மூழ்கித் திளைத்துக்கொண்டிருந்த அவள் அரண்மனையின் உப்பரிகையில் நின்றுகொண்டு அரசரின் வருகையை ஆவலோடு எதிர் நோக்கியிருந்தாள்.

...ரத்தில் வந்துகொண்டிருந்த அசோகரின் சேனைகள் ஆனால் எவ்வித ஆர்ப்பாட்டங்களுமில்லாமல், வியப்பும், பயமும் மேலிட்டன அவனுக்கு. திக்பிரமையடைந்து நின்று கொண்டிருந்தான் அவன். படைகள் அருகே நெருங்கி விட்டன. ஆனால் அவர்களுக்கு முன்னால் கம்பீரமாக வரவேண்டிய மன்னர் வராமையால் வெறிச் சென்றிருந்தது. திடுக்கிட்டு உள்ளே ஓடினன் அவன். ஒரு வேளை முன்னதாகவே வந்துவிட்டாரோ என்றறிய அரண்மனையின் ஒவ்வொரு பாகத்திற்கும் ஓடி அவரைத் தேடினன் அவன். எங்கும் அவர் காணப் படவில்லை.

கடைசியில் பீதியுடன் அரசரின் தனி அறைக்கு ஓடினன் அவன். இருளடைந்து காணப்பட்ட அவ்வறையின் எளிய உடையில், சோகம் ததும்பும் முகத்துடன் ஒரு ஆசனத்தில் சாய்ந்துகொண்டிருந்தார் அசோக சக்ரவர்த்தி.

"ஏன் இவ்வாறு உட்கார்ந்திருக்கிறீர்கள்?...... நமக்குத்தான் வெற்றி கிடைத்துவிட்டதே!...... வாருங்கள்! எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. தாங்கள் வரவேண்டியதுதான் பாக்கி!! என்று மன்னரை அழைத்தான் அரசி.

"வெற்றி!......வெற்றி! என்று வெறுப்புடன் முணு முணுத்தன அசோகரின் உதடுகள்.

"ஐயோ!......நீங்கள் ஏன் இப்படி இருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா!...... நாம் வழக்கமாக உல்லாசமாய் உலவி விட்டுவரும் தோட்டத்திற்காவது வாருங்கள்......அப்போதாவது உங்கள் மனம் நிம்மதியடையும்......" என்று அரசரின் கையைப்பிடித்து இழுத்தான் அவன்.

வெடுக்கென்று தம் கரத்தை அவன் பிடியினின்று விடுவித்துக்கொண்டார் அவர்.

"வெளியேபோ!......போய்விடு!......நான் வரப் போவதில்லை!...அத்தகைய கேளிக்கைகளில் இனி நான் ஈடுபடப் போவதில்லை;......" என்று தம்மை மறந்து, ஆவேசம் வந்தவர்போல் கூக்குரலிட்டார் அசோகர். பயமும் வியப்பும் மேலிடத் துயரத்துடன் வெளியே சென்றுவிட்டான் அவன். தம் சேவகனை அழைத்து உபகுப்தரைக் கூட்டிவரும்படி சொன்னர் அசோகர்.

உள்ளே நுழைந்த உபகுப்தரின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்தார் அசோக சக்ரவர்த்தி.

"உபகுப்தரே!......நீங்கள்தான் என்குரு!...... அஞ்ஞானம் மூடிக்கொண்டிருந்த என கண்களை நீங்கள்தான் திறந்துவிட்டு ஞான தீபத்தைக் காணச் செய்தீர்கள்!......உலக வாழ்க்கையின் இன்பங்கள், சுகங்கள் ஆகிய முதலைகளின் வாய்களில அகப்பட்டு அவதிப்பட்டுக்கொண்டிருந்த என்னைக் காப்பாற்றிக் கரை சேர்த்தீர்கள். இனி இந்த சாம்ராஜ்யத்தில் போர்முரசு அதிராது. இந்தக் கலிங்கப் போர்தான் என்னுடைய கடைசிப்போர். கோடிக்கணக்கான உயிர்களின் குருதியில் தோய்த்தெடுத்த இந்த வெற்றியை நான வெற்றியாகவே கருதவில்லை......" என்று கூறி அவருடைய அடிகளில் பணிந்தார்.

மீண்டும் புன் முறுவல் பூத்தார் உபகுப்தர்.

"மன்னர் மன்னரே!......நீர் கூறியவை உண்மைதான். நீர் இப்போது அடைந்தது உலகளவில் வெற்றி. ஆனால் ஆத்மீகத் தோல்வி. இனியாவது இந்தப் பாப உலகில உள்ள ஆசைகளிலும், உல்லாசக் கேளிக்கைகளிலும் ஈடுபட்டு உம் முழு நேரத்தையும் வீணே போககாமலிருந்துகொண்டு, வெறும் ராஜ்யங்களை வெல்வத்தில் மகிழ்ச்சியடையாமல், அதற்கெல்லாம் மேலான மனமாகிய சாம்ராஜ்யத்தை ஜயிக்க முயலுவீராக!......" என்று கூறி ஆசிர்வாதம் செய்தார்.

K. R. Kausalya
(Old Student)

॥ "त्रितयं त्रितयं त्रिषु" ॥

कविकुलललामभूतः कालिदासः कदाचित् सख्या धाराधिराजेन भोजराजेन सह व्यासकाशीं गत आसीत्। तत्र देवालये गर्भगृहे व्यासस्य प्रतिमा काचन प्रतिष्ठिता समदृश्यत। तां च प्रतिमां अनुध्यायतोऽस्य महाकवेः मनसि एवं चिन्ता समुदियाय, "अहो सपादलक्षश्लोकपरिमितस्य महाभारताख्यस्य ग्रन्थस्य निर्माता अयं महर्षिः। तच्च कर्म संवत्सरत्रितयात् प्रागेव संपूर्णमासीत्। अत्यद्भुतमिदं महत्कर्म! परंतु एतन्निर्मितेषु श्लोकेषु तत्र तत्र श्लोकपूरणार्थं चकारमेव बहुशः निरुपयोगं प्रयुज्य श्लोकान् पूरितवानयं महापुरुषः। यदि इयान् चकारप्रयोगः तत्र नाभविष्यत्, एतन्निर्मितमहाभारतेऽपि इयती श्लोकसंख्या नाभविष्यत्। चकारबहुलान् श्लोकान् कृत्वा सार्धां श्लोकलक्षसंख्यां अवाप्तवानयं महाकविः। अहो! श्लोकपूरणे निरतिशयं नैपुण्यं! कियन्तो वा चकाराः अस्य महाकवेः अस्मादुदराद्विनिर्गताः"। इति विस्मयमान एव प्रणामार्थं मुकुलीकृतं करं अपनीय दक्षिणेन पाणिना प्रतिमायाः उदरे "चकारजठरे नमः" इति अताडयत्। सन्निहिताश्च अस्य सुहृदः कवेरस्य विपरीतमिदं कर्म दृष्ट्वा परं निर्वेदं अवापुः। कवेश्च अस्य करः तत्रैव प्रतिमायां आससञ्जे। पुनश्च तं करं प्रतिमायाः आदातुं न शशाकायं महाकविः।

तदात्व एव कश्चन स्थविरः जटी लम्बकूर्चः दण्डं धारयन् पदात्पदमपि चलितुमशक्तः तत्र समदृश्यत। स चात्र दृश्यमानं संभ्रमं वीक्ष्य "को विशेषः"? इति आसन्नानप्राक्षीत्। भोजराजश्च सर्वमुदन्तं अस्मै स्थविराय आवेदयामास।

वृत्तान्तमेनं श्रुत्वा स्थविरः सस्मितं कालिदासं ऋजुनैव चक्षुषा पश्यन् "यदि इयती ग्रन्थरचना सरभसं रचनीया भवति, तदा तत्र तत्र निरुपयोगचकारप्रयोगं विना ग्रन्थं पूरयितुं समर्थो भवान् ननु? तर्हि समस्यामिमां पूरयतु भवान्" इत्यभिधाय "त्रितयं त्रितयं त्रिषु" इतीमां समस्यामदात्।

सपद्येव संविदितसमस्यागतगूढार्थः असौ महाकविः एवं समस्यापूरणं आरेभे:—

"पतिश्वशुरता ज्येष्ठे
पतिदेवरताऽनुजे।
इतरेषु च पाञ्चाल्याः
त्रितयं त्रितयं त्रिषु"॥ इति

किमाश्चर्यं! करः पुनः प्रतिमायाः यथापूर्वं आजगाम। स्थविरश्च तत्र नादृश्यत। सुहृदश्च तदद्भुतं दृष्ट्वा परां संतुष्टिं अवापुः। कविसार्वभौमः कालिदासः पुनः अत्र आगतं महापुरुषं भगवन्तं बादरायणमेव जानन् महतीं लज्जां अवाप। मनसि च एवं आकलयामास। "अहो मे मूर्खतायाः प्रकारः! अहो मे महाजननिन्दायामादरः! एकस्मिन् श्लोके कर्तव्ये जाते निरुपयोगं मे एकश्चकारः आपतितः। सार्धलक्षग्रन्थसंमितस्य महाप्रबंधस्य निर्मातुः कथन्तरां वा तत्र तत्र निरुपयोगं चकारः नापतेत्। एवमपि दृप्तं मां करुणानिधिः भगवान्बादरायणः अत्र आविर्भूय दर्पं मे अपनीतवान्। सर्वथा महात्मानो महर्षयः, कृपानिधयश्च"। इति मन्वानः कृतज्ञताविष्टहृदयः असकृत्तस्याः प्रतिमायाः प्रदक्षिणनमस्कारान् कृत्वा ससुहृज्जनः स्वदेशं आजगाम।

"मदेन विद्या कपटेन मैत्री
लोभेन लक्ष्मीरिव लुप्तशोभा"॥

इति च अन्योऽपि कश्चन महाकविरनुवदति। सर्वथा विद्यामदः न श्रेयसे।

S. S. Visalakshi,
Old Student.

உ

திருவல்லிக்கேணி

தேசிய பெண்கள் கலாசாலை

—:O:—

மங்களம் பொங்குகவே !

சங்கமும் திகிரியும் தாங்கிய பார்த்த
சாரதி யருளால் பாரினி லெங்கும்
மங்களம் பொங்குகவே !

மாநிலம் மகிழ, மழைவளம் பொழிக !
ஆனிரை யருளோடு அறநெறி நிறைக !

பானிற மனமொடு பாவையர் பயிலும்,
தேனினும் இனியநம் தேசிய சாலையில்
மங்களம் பொங்குகவே !

மங்களம்

—:X:—